[*2025 மார்ச் 17*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

4. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைப் பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அடுத்த அலுவல், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைப் பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானம். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்கள் உட்பட சில அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் கையொப்பமிட்டு, 11-1-2025 ஆம் நாளைய கடிதத்தில் "அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 179(C)-ன்படி பேரவைத் தலைவர் அவர்களைப் பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்னும் தீர்மானத்தைக் கொண்டுவர கோருகிறோம்" என அறிவிப்பு கொடுத்தார்கள். தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளில் குறிப்பிட்டுள்ளவாறு, இன்றைக்கு அந்த அலுவல் எடுத்துக்கொள்ளப்பட உள்ளது. இப்போது பேரவையின் முன்னுள்ள அலுவல், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைப் பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானம் ஆகும். பேரவை விதி 70(1)-ன்படி, இத்தீர்மானத்தை நான் பேரவைக்குப் படிக்க வேண்டும். தீர்மானம் கீழ்க்கண்டவாறு உள்ளது:*

"மாண்புமிகு திரு. மு. அப்பாவு அவர்களைப் பேரவைத் தலைவர் பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்று இப்பேரவை தீர்மானிக்கிறது."

முற்பகல் 10-55

இந்தத் தீர்மானத்திற்கான அறிவிப்பினை மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்கள் கொடுத்துள்ளார்கள். பேரவை விதி 70(1)-ன்படி, இத்தீர்மானத்தை முன்மொழிய இப்பேரவை இசைவு அளிக்க வேண்டும். எனவே, பேரவை இசைவு அளிக்கிறதா, இல்லையா என்பதை அறிய இத்தீர்மானத்தைக் கொண்டுவர இசைவளிக்கும்

உறுப்பினர்களை அவரவர்கள் இடங்களிலே எழுந்து நிற்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)

உட்காருங்கள், அனைவரும் உட்காருங்கள். 35–க்குக் குறையாத உறுப்பினர்கள் எழுந்து நின்று இசைவு அளித்திருப்பதால், இத்தீர்மானத்திற்குப் பேரவையின் அனுமதி கிடைத்துள்ளது என அறிவிக்கிறேன். பேரவை விதி 70(2)–ன்படி, இத்தனித் தீர்மானத்தின் விவாதம் உடனடியாக நடைபெறலாம். எனவே, இப்போதே இந்தத் தீர்மானம் பேரவையிலே முன்மொழியப்பட்டு, விவாதிக்கப்படலாம். பேரவைத் தலைவர் பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானம் முன்மொழியப்பட்டு, விவாதம் உடனே எடுத்துக்கொள்ள இருப்பதால், சபையின் அலுவல்களை மேற்கொள்ளுமாறு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தனது இருக்கையிலிருந்து இறங்கி தனது அறைக்குச் சென்றார்.)

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இப்போது பேரவையின் முன்னுள்ள அலுவலான மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைப் பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானம் முன்மொழியப்பட்டு, விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்கள் தீர்மானத்தை முன்மொழியலாம்.

திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண் 68–ன்கீழ் அடியிற்கண்ட தீர்மானத்தை அவையில் கொண்டு வருவதற்கு அனுமதி கோருகிறேன்:

"மாண்புமிகு திரு. மு. அப்பாவு அவர்களைப் பேரவைத் தலைவர் பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்று இப்பேரவை தீர்மானிக்கிறது"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

[*2025 மார்ச் 17*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இத்தீர்மானத்தை வழிமொழிபவர் வழிமொழியலாம்.

திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பழைய ஞாபகத்தில் 'பேரவைத் தலைவர்' என்று சொல்லிவிட்டீர்கள். பேரவைத் துணைத் தலைவர் உட்கார்ந்திருக்கிறேன்.

திரு. எஸ்.பி. வேலுமணி: பேரவைத் துணைத் தலைவர்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: விவாதம் தொடங்குகிறது. முதலில், தீர்மானத்தைக் கொடுத்துள்ள மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்கள்.

திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இத்தீர்மானத்தின்மீது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களைப் பேச அனுமதிக்குமாறு வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

***திரு. எடப்பாடி K. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றம் 1921 ஆம் ஆண்டு Madras Legislative Council ஆக ஆரம்பிக்கப்பட்டு, தற்போது 100 ஆண்டுகளுக்கும் மேலாக பாரம்பரியமிக்க அவையாகத் திகழ்கிறது. இந்தச் சிறப்புமிக்க அவையில் நடுநிலை தவறாது பலர் சட்டப் பேரவைத் தலைவர் நாற்காலியை அலங்கரித்திருக்கிறார்கள். இப்பேரவைத் தலைவர் நாற்காலியின் வரலாறு மிகவும் அற்புதமானது. இதனை வழங்கியவர் Lord Willingdon அவர்கள். "இந்த நாற்காலியில் அமருபவர் சென்னை மாகாண கவுன்சிலின் உயர்ந்த கண்ணியத்தையும், பெருமையையும் நிலைநாட்டிட செய்யும் வகையில் இந்த அவையை நடத்திச் செல்பவர்கள்" என்று குறிப்பிட்டுள்ளார்.

2025 மார்ச் 17] [திரு. எடப்பாடி K. பழனிசாமி]

பேரவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரை முதல்வரும், எதிர்க்கட்சித் தலைவரும் பேரவைத் தலைவர் இருக்கையில் அமர வைக்கின்றனர். ஏனெனில், பேரவைத் தலைவர் என்பவர் அனைவருக்கும் பொதுவானவர்; ஆளும்கட்சி, எதிர்க்கட்சி என்று பிரித்துப் பாகுபாடு பார்க்காமல் நடுநிலையோடு நடந்துகொள்ள வேண்டும் என்பதற்காக. பேரவைத் தலைவர் ஒருதலைபட்சமாகச் செயல்படாமல், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரையும் பாரபட்சமின்றி சமமாகக் கருத வேண்டியது அவரது கடமை. இப்படி நடுநிலையோடு நடக்க வேண்டிய பேரவைத் தலைவரின் செயல்பாடு பல்வேறு நிகழ்ச்சிகளில் ஒருதலைபட்சமாக இருக்கிறது. பிரதான எதிர்க்கட்சி உறுப்பினர்களாகிய நாங்கள் மக்கள் பிரச்சினைகளைப் பேரவையில் பேசுகின்றபோது, பல்வேறு குறுக்கீடுகளை, இடையூறுகளை பேரவைத் தலைவரிடமிருந்தே எதிர்கொள்ள வேண்டிய நிலை உள்ளது. மக்களின் பிரச்சினைகளைப் பேரவையில் எடுத்துக்கூறி, சம்பந்தப்பட்ட துறையின் அமைச்சர்களின் பதிலைப் பெற முடிவதில்லை. மாறாக, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே குறுக்கிட்டு, அதற்குப் பதிலளிக்கின்றார். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் மாண்புமிகு துறை அமைச்சரிடமிருந்து நாங்கள் மக்களின் கோரிக்கைக்குத் தீர்வு காணும் வாய்ப்பைப் பெற முடியாத சூழ்நிலை சில சமயங்களில் ஏற்படுகிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் குறுக்கிட்டுப் பேசும்போது, ஒரு சில சமயங்களில் அவை முன்னவரும்கூட சம்பந்தப்பட்ட அமைச்சர்களைப் பதிலளிக்க அனுமதியுங்கள் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

முற்பகல் 11-00

அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டம் நடைபெறும்போதெல்லாம், நாங்கள் அதிக நாட்கள் சட்டமன்றக் கூட்டம் நடைபெற வேண்டுமென்று வலியுறுத்துவோம். எனினும், பேரவைத் தலைவர் அவர்களால் ஆளுங்கட்சியின் எண்ணத்திற்கேற்ப, குறைந்த நாட்களே சட்டமன்றக் கூட்டம் நடத்தப்பட்டிருக்கின்றது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் வாக்குறுதிகளில்

[திரு. எடப்பாடி K. பழனிசாமி] [*2025 மார்ச் 17*

ஒன்றாக, 'சட்டமன்றப் பேரவை நிகழ்ச்சிகள் ஒவ்வோராண்டும் குறைந்தபட்சம் 100 நாட்கள் நடத்தப்படும்' என்று அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி, கடந்த 4 ஆண்டு கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், சுமார் 400 நாட்கள் சட்டமன்றப் பேரவை நிகழ்ச்சிகள் நடந்திருக்க வேண்டும். ஆனால், சுமார் 116 நாட்கள்தான் சட்டமன்றக் கூட்டம் நடந்துள்ளது. ஒரே நாளில் 4, 5 துறைகளின் மானியக் கோரிக்கைகள் கடந்த காலங்களில் எடுத்துக்கொள்ளப்பட்டன. இதில் எப்படி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் 4 மானியக் கோரிக்கைகளிலும் விரிவாகப் பேச முடியும்? அப்படியே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் பேச ஆரம்பித்ததும், பல குறுக்கீடுகள், சபாநாயகரின் கிண்டலும் கேலியும், கடைசியாக, 'நன்றி சொல்லிவிட்டு அமருங்கள்' என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் உறுப்பினர்களை அவசரப்படுத்துகின்றார். இதனால், எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் மக்களுடைய பிரச்சினைகளை சட்டமன்றத்தில் முழுமையாகப் பேச முடிவதில்லை. இது ஜனநாயகமா? மக்கள் பிரச்சினைகளைப் பேசுவதற்குத்தான் இப்பேரவை. ஆளுங்கட்சியின் தோல்வியையும், மக்களுடைய பிரச்சினைகளையும் பேசுவதற்குத் தடையாக இருக்கின்றார் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள். அவர் யாருடைய கட்டளையின்கீழ் இயங்குகிறார்? இது சட்டமன்ற மரபுகளுக்கும், விதிகளுக்கும் முரணானது. பேரவையின் அனைத்து நிகழ்ச்சிகளும் முழுமையாக நேரடி ஒளிபரப்பு செய்யப்படும் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில் கொடுத்திருக்கின்றார்கள். ஆனால் அதை இன்றுவரை நடைமுறைப்படுத்தவில்லை. சட்டமன்ற நிகழ்ச்சிகளில் கேள்வி நேரம் முழுமையாக நேரடி ஒளிபரப்பு செய்யப்படுகிறது என்று பேரவைத் தலைவர் அறிவித்துள்ள நிலையில், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசுவது சில சமயங்களில் முழுமையாக ஒளிபரப்பு செய்யப்படுவதில்லை. கருப்பு சட்டை அணிந்து பேரவைக்கு வந்த அனைந்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அமர்ந்திருந்த பகுதியை ஒளிபரப்பு செய்யாமல், இருட்டடிப்புச் செய்தவர் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள். மேலும், கேள்வி நேரத்தில் எங்கள் உறுப்பினர்கள் பேசும்போது

2025 மார்ச் 17] [திரு. எடப்பாடி K. பழனிசாமி]

நேரடி ஒளிபரப்பு அன்று செய்யப்படவில்லை. அதேபோல், நேரமில்லா நேரத்தில் (zero hour) தமிழகத்தில் நிகழ்ந்துள்ள முக்கியப் பிரச்சினைகள் குறித்து நாங்கள் பேசும்போதும், விவாதங்கள் நடைபெறும்போதும், எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் நான் எனது கருத்துகளைத் தெரிவிக்கும்போதும், அவற்றை நேரடியாக ஒளிபரப்பு செய்யாத நிலையில், எங்களது கேள்விக்குப் பதில் அளிக்கும் மாண்புமிகு முதல்வர் மற்றும் மாண்புமிகு அமைச்சர்களையும் நேரடி ஒளிபரப்பு செய்வதால், பொது மக்களுக்கு எதற்காக மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள் பதில் அளிக்கின்றார்கள் என்ற விவரம் தெரிவதில்லை. இதை நான் பல முறை அவையில் சுட்டிக்காட்டி, சட்டமன்றப் பேரவை நிகழ்ச்சிகளை நேரடியாக ஒளிபரப்பு செய்ய வலியுறுத்தி, பலமுறை வெளிநடப்புச் செய்திருக்கிறோம். ஆனால், இன்றுவரை, பேரவைத் தலைவர் நேரடி ஒளிபரப்புக்குத் தீர்வு காணவில்லை. தொடர்ந்து எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் பேசுவது இருட்டடிப்புச் செய்யப்பட்டு வருகிறது. இதுதான் ஒருதலைபட்சமாகும்.

2025 ஆம் ஆண்டு ஆளுநர் உரையின்மீது நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில், நான் பேசியதன் ஒளிநாடாவை வழங்கக் கோரி, அவையிலேயே பேரவைத் தலைவரிடம் கோரிக்கை வைத்தேன். தொடர்ந்து எதிர்க்கட்சித் துணைத் தலைவர், எதிர்க்கட்சிக் கொறடா மற்றும் மூத்த உறுப்பினர்கள் நேரடியாகப் பேரவைத் தலைவரிடம் கோரிக்கை வைத்தபின், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களால் சுமார் 46 நிமிடங்கள் கொண்ட ஒளிப்பதிவு அடங்கிய பென்டிரைவ் வழங்கப்பட்டது. இதில் மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு அமைச்சர்கள், மாண்புமிகு பேரவைத் தலைவர் பேசியது 44 நிமிடங்கள்; மீதம் இரண்டு நிமிடங்கள் மட்டுமே நான் பேசியதைத் தந்துள்ளனர். மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஒருதலைபட்சமான நடவடிக்கை இதிலிருந்து அப்பட்டமாகத் தெரிகிறது.

அதேபோல், 8-1-2025 அன்று சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு. ராஜன் செல்லப்பா அவர்கள் டங்ஸ்டன் பிரச்சினை குறித்து பேசும்போது, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், 'நீங்கள்தான் அந்தப் போராட்டத்தைத் தூண்டி விடுகிறீர்கள்' என்று நேரடியாக

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைப் பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானம்

[திரு. எடப்பாடி K. பழனிசாமி] [*2025 மார்ச் 17 மாண்புமிகு உறுப்பினரை குற்றஞ்சாட்டிப் பேசியுள்ளார். கண்ணியமிக்க பேரவைத் தலைவர் எப்படி இதனைக் கூறலாம்?*

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவராக திரு. ஆர்.பி. உதயகுமார், துணைச் செயலாளராக திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி ஆகியோரை 17–11–2022 அன்று எங்களது சட்டமன்ற உறுப்பினர்கள்மூலம் முறைப்படி தேர்ந்தெடுத்தோம். அதனடிப்படையில் திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்களை சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவராகவும், திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்களை துணைச் செயலாளராகவும் அறிவிக்க 19–11–2022 அன்று பேரவைத் தலைவரிடம் கடிதம் வழங்கினோம். பேரவைத் தலைவர் அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. பலமுறை நாங்கள் நேரில் கடிதம் கொடுத்து வலியுறுத்தினோம்; அதுகுறித்து அவையில் வெளிநடப்பும் செய்திருந்தோம். சுமார் இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகுதான் பேரவைத் தலைவர் அவர்கள் எங்களது கோரிக்கையை ஏற்று திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்களை சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவராக அறிவித்தார்.

முற்பகல் 11-0.5

அதேபோல, பொதுக் கணக்குக் குழுத் தலைவராகப் பிரதான எதிர்க்கட்சித் தலைவர்தான் நியமிக்கப்பட வேண்டும் என்பது வழக்கமாக இருந்தது. இன்றைய அவை முன்னவர் அவர்களை, எங்கள் ஆட்சிக் காலத்தில் பொதுக் கணக்குக் குழுத் தலைவராக நாங்கள் நியமித்தோம். 2021 ஆம் ஆண்டு முதல் இன்று வரை, நான்கு ஆண்டுகளாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் கூட்டணி கட்சியைச் சார்ந்தவரே பொதுக் கணக்குக் குழுத் தலைவராக உள்ளார். பிரதான எதிர்க்கட்சியான எங்களுக்கு இந்த வாய்ப்பை வழங்காத பேரவைத் தலைவரின் நடவடிக்கை ஒருதலைபட்சமானது.

தஞ்சாவூர் கோயில் திருத்தேர் விழாவில் தீ விபத்து ஏற்பட்டு 11 பேர் இறந்த நிகழ்வில், 27–4–2022 அன்று பேரவையில் சிறப்புக் கவன ஈர்ப்பு கோரியபோது, வாய்ப்பு வழங்கப்படாத நிலையில், நாங்கள் எதிர்ப்பைத் தெரிவித்தபோது, பேரவைத் தலைவர் அவர்கள் தேவையற்ற வார்த்தைகளை உபயோகப்படுத்தினார்.

2025 மார்ச் 17] [திரு. எடப்பாடி K. பழனிசாமி]

*சம்பந்தப்பட்ட துறையின் மாண்புமிகு அமைச்சரையோ, மாண்புமிகு முதலமைச்சரையோ பதிலளிக்கவிடாமல் தடுத்து, பேரவைத் தலைவர் அவர்கள் ஒரு தலைபட்சமாக நடந்துகொண்டார்கள். ** (குறுக்கீடு) இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால். . .*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *எங்களுடைய பேரவைத் தலைவர் அவர்கள் எப்படி நடந்துகொண்டார் என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டுகிறேன். அன்றையதினம், நடுநிலையோடு. . .*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தீர்மானம் என்பது. . . (குறுக்கீடுகள்) ஒரு நிமிடம், ஒரு நிமிடம். (குறுக்கீடு) இல்லை, இல்லை. இன்றைய தீர்மானம் இப்போது இருக்கிற மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் குறித்துதான் தீர்மானம் வந்திருக்கிறது. நடந்த சம்பவங்கள் எப்பொழுதுமே, அவர்கள் ஆட்சியில் இருக்கின்றபோது, ** என்று இப்போது சட்டமன்றத்திலே பதிவு செய்வது என்பது, ஏற்றுக்கொள்ள அவசியமில்லாத ஒன்று. இதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கலாம். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *அதாவது, இந்தத் தீர்மானத்திற்கு. . . (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. இந்தத் தீர்மானத்திற்கு தேவையில்லாதவை நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்)*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *தேவையில்லாததை நீக்க முடியாது. இந்தத் தீர்மானத்தை எப்படி நீக்க முடியும்?*

** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

[*2025 மார்ச் 17*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *ஏற்கெனவே... (குறுக்கீடுகள்) சென்ற முறை நடந்ததுதானே? சென்ற முறை நடந்தவற்றையெல்லாம் இப்போது சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். அதனால் அதைச் சொல்கிறோம். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *அதாவது, அவர் இந்தத் தீர்மானத்தின்மீது பேசலாம். அதில் மாறுபட்ட கருத்து அல்ல. ஆனால், இன்றைக்கு மாண்புமிகு திரு. அப்பாவு அவர்கள்மீது தீர்மானம் தொடுக்கப்பட்டது. அவர்மீதான குற்றங்களை* one, two, three, four *என்று சொல்ல வேண்டும். ஆனால், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், பழைய சம்பவங்களையெல்லாம் சொல்கிறார்கள். அப்படியானால், நாங்களும் பேசுகிறபோது பழைய சம்பவங்களையெல்லாம் பேசுகிற நிலை ஏற்படும். அதனால் வேண்டாத ஒரு நிலைமை உருவாகும். ஆகையினால், மாண்புமிகு திரு. அப்பாவு அவர்கள்மீது எத்தனை குற்றச்சாட்டுகள் நீங்கள் சொல்கிறீர்களோ, அதைச் சொல்லுங்கள். அதற்கு நாங்கள் பதில் சொல்கிறோம். அப்போது நீங்கள் செய்தீர்கள், நாங்கள் செய்தோம் என்று சொன்னால், இந்தத் தீர்மானத்தினுடைய நோக்கமே வேறு திசைக்குப் போய்விடும் என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அறிவார்கள்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எப்படி அப்பொழுது இருந்த சட்டப் பேரவைத் தலைவர் நடந்து கொண்டார் என்பதைப் பற்றிதான் இங்கே விளக்கமாகப் பேசிக் கொண்டிருக்கிறோம். (குறுக்கீடுகள்) ஆகவே, அன்றையதினம் எவ்வளவோ பிரச்சினைகள் அரங்கேறியபோதும். . .*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது*

2025 மார்ச் 17] [திரு. மு.க. ஸ்டாலின்]

இங்கே சபாநாயகராக இருக்கக்கூடிய மாண்புமிகு திரு. அப்பாவு அவர்கள்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆகவே, அவர் மீதான குற்றச்சாட்டுகளை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எடுத்து வைப்பதிலே, எந்தத் தடையும் கிடையாது; நாங்கள் அதை ஆட்சேபிக்கவும் இல்லை. இங்கு நம்முடைய மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் சொன்னதுபோல, கடந்தகால சம்பவங்களுக்கும் மாண்புமிகு திரு. அப்பாவு அவர்களுக்கும் என்ன சம்பந்தம்? கடந்தகால நிகழ்வுகளுக்கும், இப்போது இருக்கக்கூடிய சபாநாயகருக்கும் என்ன சம்பந்தம்? எனவே, கடந்தகால சம்பவங்களை நீங்கள் பேசத் தொடங்கினால், நாங்களும் பேசத் தொடங்குவோம்; வேறு வழியில்லாமல் போகும். (மேசையைத் தட்டும் ஒலி) மீண்டும் சபையில் பெரிய கூச்சல்-குழப்பம் ஏற்பட வாய்ப்பு ஏற்படும். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, தயவுகூர்ந்து நான் மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்; அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய தீர்மானத்தின் அடிப்படையில் பேசட்டும்; நாங்கள் தடுக்கவில்லை.

முற்பகல் 11-10

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், இந்தத் தீர்மானத்தில் மட்டும் உங்கள் கருத்துகளைச் சொல்லுங்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முந்தைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் நடந்து கொண்டதைப்பற்றி. . . (குறுக்கீடுகள்) அவர் எப்படி நடந்துகொண்டார் என்பதைத்தான் நான் சொல்கிறேன். வேறு ஒன்றும் கிடையாது. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவரில்லை; அவர் இப்போது இல்லை.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அன்றையதினம் நடுநிலையோடு நடந்துகொண்டவர் அன்றைய பேரவைத் தலைவர் திரு. தனபால் அவர்கள். திரு. அப்பாவு அவர்கள். . .

[*2025 மார்ச் 17*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)*

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதில் ஒரு சதவிகிதம்கூட நடுநிலைமை கிடையாது. நாங்கள் எழுந்தால், 'உட்காருங்கள்' என்றுதான் சொல்வார்கள். நாங்கள் 40 நிமிடங்கள் பேசினால், 35 நிமிடங்கள் அவர்களுடைய அமைச்சர்கள்தான் குறுக்கீடு செய்திருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) எங்களுடைய பேச்சு ஐந்து நிமிடங்கள்தான்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *இங்கே என்ன விவாதமா நடக்கிறது? இதை உங்கள் கட்சி சார்பாகப் பேசுங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசட்டும். நாங்கள் வேண்டாம் என்று சொல்லவில்லை. அவர்கள் பேசும்போது, எல்லாம் சொல்லட்டும். திரு. அப்பாவு அவர்கள் ஆசிரியர். அனைவரிடமும் அன்பாகப் பழகக்கூடியவர். அவர்மேல் தனிப்பட்ட முறையில் எனக்கு எந்த விருப்பு, வெறுப்பு கிடையாது. தொலைக்காட்சி விவாதங்களில்கூட அவர் கலந்துகொண்டு, பேசுகின்றபொழுது, அப்போது வாதங்களை ஆளும்கட்சிக்கு சாதகமாக எடுத்துவைத்தவர். ஆனால், பேரவைத் தலைவர் பதவிக்கு வந்தபிறகு, அவர் நடுநிலைமையோடு செயல்படாமல், ஆளுங்கட்சி உறுப்பினர்போல் செயல்படுவது ஏற்புடையதல்ல. அந்தப் பதவிக்குரிய மாண்புடன் நடந்துகொள்ளவில்லை. இதுதான் எங்களுடைய குற்றச்சாட்டு. மாண்புமிகு பேரவைத் தலைவர் ஒருதலைபட்சத்தோடு. . . (குறுக்கீடு) போதும் என்பதற்கு வரவில்லை. இன்னும் நிறைய இருக்கிறது. இடையிடையே மறித்துப் பேசினால் என்ன அர்த்தம்? (குறுக்கீடு) எங்களுக்கும் பேசத் தெரியும். அந்தக் காலத்தில் நீங்கள் எப்படியெல்லாம் ** என்று எங்களுக்கும் தெரியும். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்: *உட்கார்ந்துகொண்டு யாரும் பேசக்கூடாது.*

** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

2025 மார்ச் 17]

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *நாங்கள் கண்ணியத்தோடு பேசலாம் என்று நினைக்கிறோம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் ஒருதலைபட்சமாக செயல்படாமல், அனைத்து உறுப்பினர்களின் மாண்பையும், கண்ணியத்தையும், சுதந்திரத்தையும் காக்கும் வகையில் செயல்படக்கூடியவர் ஒருவர் வேண்டும் என்பதற்காகத்தான், மாண்புமிகு பேரவைத் தலைவரை பதவி நீக்கக்கோரும் தீர்மானத்தை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கொண்டு வந்துள்ளது. அண்மையில் பாட்னாவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்ட மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. மு. அப்பாவு அவர்கள், அவர்களுடைய கருத்துகளைப் பதியவைக்க முடியவில்லை என்பதால், வெளிநடப்பு செய்தார். மாண்புமிகு பேரவைத் தலைவர் தனக்குக் பேசுவதற்கு வாய்ப்பு வழங்கப்படவில்லையென்பதால் வெளிநடப்பு செய்தார்.*

இதேபோன்றுதான், பிரதான எதிர்க்கட்சி என்ற முறையில் நாங்கள் இப்பேரவையில் மக்கள் பிரச்சினைகளை அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்து, தீர்வு காண முயற்சிக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், பேசுவதற்கு வாய்ப்பளிக்காததைத் கண்டித்து, நாங்கள் வெளிநடப்பு செய்தால் எங்களைப் பார்த்து நகைக்கிறார்கள். போங்க, போங்க என்று சட்டமன்றத்திலேயே மாண்புமிகு உறுப்பினர்களை கிண்டலும், கேலியுமாக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் பேசுவது ஒருதலைபட்சமாகும்.

27–4–2022 அன்று மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன் அவர்கள் அவையிலே பேசினார். அ.தி.மு.க. ஆட்சியில் மதுரை சிறையில் மட்டும் ரூ.100 கோடி அளவிற்கு ஊழல் நடைபெற்றதாகப் பத்திரிகையில் வந்துள்ளதாகப் பேசினார். அதை மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் மறுத்திருக்கின்றார். ஆனால், இது ஆதாரமற்ற குற்றச்சாட்டு, இன்றுவரை பதிவில் உள்ளது. 8–1–2025 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அவையில் பேசியது, நீங்கள் பதாகைகளை எடுத்துக்கொண்டு வந்து, மாண்புமிகு ஆளுநர் அவர்களுக்கு நெருக்கடி கொடுத்த காரணத்தினால், ஆளுநர் அவர்கள் சென்றுவிட்ட காரணத்தினால் அவையிலிருந்து உங்களை வெளியேற்றுகிறேன் என்று

[திரு. எடப்பாடி K. பழனிசாமி] [*2025 மார்ச் 17*

தவறுதலாகப் பதிவேற்றுகின்றார். இவையெல்லாம் அவைக்குறிப்பில் உள்ளது. உண்மையில் "யார் அந்த சார்?" என்ற அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் பலாத்காரத்திற்குக் காரணமானவர்களுக்கு உரிய தண்டனை கிடைக்க வேண்டுமென்பதற்காகத்தான் நாங்கள் அதை வலியுறுத்தினோம். மேலும், அன்றைக்கு இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களும் மாண்புமிகு ஆளுநரை எதிர்த்துக் கோஷமிட்டார்கள். அவர்கள்மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. நேரமில்லா நேரத்தில் தமிழகத்தில் நிகழ்ந்த எந்த முக்கியப் பிரச்சினையையும் பேசுவதற்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் எங்களை அனுமதிப்பதில்லை. எங்களுடைய உறுப்பினர்கள் கொடுக்கின்ற பெரும்பாலான கவன ஈர்ப்புத் தீர்மானங்களை ஏற்றுக்கொள்வதில்லை.

12–1–2023 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் கருமேனியாறு–நம்பியாறு திட்டம் *2009* ஆம் தொடங்கப்பட்டு, *2011* ஆம் ஆண்டு பாதிப் பணிகள் முடிந்தன; அந்தத் திட்டத்தை கலைஞர் அவர்கள் கொண்டு வந்த காரணத்தினால், முன்னாள் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் இத்திட்டம் கிடப்பில் போடப்பட்டதாக இங்கே அரசியல் பேசியிருக்கின்றார். அன்றையதினம் இதனுடைய நிலைமை என்னவென்றால் அன்றைய ஆட்சியாளர் அதற்கு நிலம் எடுக்காத காரணத்தினால்தான் அதில் காலதாமதம் ஏற்பட்டது. ஆனால், நடுநிலையோடு நடந்துகொள்ள வேண்டிய மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் இப்படி ஒருதலைபட்சமாக பேசுவது எந்த விதத்தில் நியாயம்? அதேபோன்று *2024*, பிப்ரவரி மாதம் *14*, *15* ஆகிய தேதிகளில் மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், நான் முதலமைச்சராக இருந்தபோது ஒரு புதிய ஆரம்ப சுகாதார நிலையம்கூட ஆரம்பிக்கப்படவில்லை என்று சவால் விடுத்தார். அடுத்த நாள், அரசாணை எண் *467*, நாள் *11–12–2017*–ன்படி *12* புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களும், அரசாணை எண் *91*, நாள் *20–3–2018*–ன்படி *30* புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களும் என்று மொத்தம் *42* ஆரம்ப சுகாதார நிலையங்கள் திறக்கப்பட்டன என்று நான் மாண்புமிகு பேரவைத் தலைவரிடத்தில் ஆதாரத்தோடு வழங்கினேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அவையில் தவறான கருத்தைப் பதிய வைத்துள்ளார் என்று அரசாணையின் ஆதாரத்தோடு

2025 மார்ச் 17] [திரு. எடப்பாடி K. பழனிசாமி]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடத்தில் அளித்தும், இதுவரை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசியதை அவைக் குறிப்பில் இருந்து நீக்கவில்லை.

முற்பகல் 11—15

மேலே நான் குறிப்பிட்டுள்ள ஒரு சில சம்பவங்கள், மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஒருதலைபட்சமான செயலை தெள்ளத்தெளிவாகக் காட்டுகின்றன அவரது செயலும், நடவடிக்கையும் நடுநிலையோடு நடந்துகொள்ளவில்லை. 'ஒரு பானை சோற்றுக்கு, ஒரு சோறு பதம்' என்பதுபோல அவரது செயல்பாடு, ஆளுங்கட்சிக்கு ஆதரவாக உள்ளது. அவர் நடுநிலையோடு செயல்படவில்லை. பேரவையின் மரபையும், கண்ணியத்தையும் காக்கவில்லை. குறிப்பாக, *14—3—2025* அன்று இத்தீர்மானம் குறித்து எங்களது சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசியபோது, *2017* ஆம் ஆண்டுகூட, அப்போதைய சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் உடனே தீர்மானத்தை எடுத்துக்கொள்ளவில்லை என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் ஒரு தவறான தகவலைப் பதிவிட்டார். ஆனால், உண்மையில், அப்போதைய மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. ப. தனபால் அவர்கள், அப்போதைய சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கொடுத்த தீர்மானத்தை *14* நாட்கள் முடிவடைந்த அடுத்த நாளே இப்பேரவையில் விவாதிக்க அனுமதித்தார் என்பதை இப்பேரவையில் பதிய வைக்க விரும்புகின்றேன். இது பேரவையில் பதிவாகியுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஆளுங்கட்சி உறுப்பினர்களையும், எதிர்க்கட்சி உறுப்பினர்களையும் சமமாகக் கருதி, அவர்கள் பேசுவதற்கு வாய்ப்பு வழங்க வேண்டிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், 'ஒரு கண்ணில் வெண்ணெய், ஒரு கண்ணில் சுண்ணாம்பு' என்ற பழமொழிக்கேற்ப ஆளுங்கட்சியினருக்கு அதிக வாய்ப்பும், சாதகமாகவும், எதிர்க்கட்சி உறுப்பினர்களின் உரிமையைப் பறிப்பதும் ஏற்கத்தக்கதல்ல. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் பாரபட்சமாக, ஒருதலைபட்சமாக தமிழ்நாடு சட்டப் பேரவை விதிகளை புறந்தள்ளி நடந்துகொண்டதால், மாண்புமிகு பேரவைத் தலைவரைப் பதவியிலிருந்து நீக்கக்கூடிய தீர்மானத்தை எங்களது சட்டமன்ற எதிர்க்கட்சித்

[திரு. எடப்பாடி K. பழனிசாமி] [*2025 மார்ச் 17*

துணைத் தலைவர் அவர்கள் முன்மொழிந்தார்கள். எங்களது எதிர்க்கட்சிக் கொறடா அவர்களும் அதை வழிமொழிந்தார்கள். எனவே, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களது சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்தை division*–க்கு விடுமாறு கேட்டு அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ஜெகன் மூர்த்தி அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், மதுரை சிறையில் நடந்த, அந்தக் குற்றச்சாட்டைப்பற்றிக் கூறினார். 2016–2021 ஆம் ஆண்டு நடைபெற்ற அதற்கும், எங்களுக்கும் சம்பந்தம் கிடையாது.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள்.*

திரு. கு. செல்வபெருந்தகை: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விதி 68–ன்கீழ் இன்று மாண்புமிகு பேரவைத் தலைவரை பதவியிலிருந்து நீக்க வேண்டுமென்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உரையாற்றியிருக்கிறார்கள். இந்த அவை என்பது வரலாற்றுச் சிறப்புமிக்க அவை.* House of the Lawmakers. *இப்படிப்பட்ட ஓர் அவையில் கடந்த காலங்களில் மேனாள் பேரவைத் தலைவர்கள் திரு. மதியழகன், திரு. பெ. சீனிவாசன், நம்முடைய பேரவைத் தலைவராக இருந்த திரு. ஆவுடையப்பன் போன்ற தலைவர்கள் மீதெல்லாம் இப்படிப்பட்ட பதவி நீக்கத் தீர்மானங்கள் வந்திருக்கின்றன. ஆனால், இப்போது வந்திருப்பதை மிகவும் விசித்திரமான காட்சியாக நாங்கள் பார்க்கிறோம். ஓர் ஆசிரியர்; ஒரு பண்பாளர்; தமிழ்நாட்டு நலனைப் பாதுகாப்பதில் பேரவையில் கண்ணியமாகவும், நியாயமாகவும் நடந்துகொள்பவர். அந்நிய மண்ணில், வெளிநாடுகளுக்குச் சென்றாலும் தமிழர்களுடைய பெருமையை, தமிழ்நாட்டினுடைய பெருமையைப் பேசக்கூடிய மாண்புமிகு பேரவைத் தலைவராக நான் இவரைப் பார்த்திருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

2025 மார்ச் 17] [திரு. கு. செல்வபெருந்தகை]

அதுமட்டுமல்ல, பாட்னாவில் இந்த தேசத்தில் உள்ள மாண்புமிகு பேரவைத் தலைவர்களெல்லாம் கூடிய மாநாட்டில், தமிழ்நாட்டிற்குக் கிடைக்க வேண்டிய உரிமைகளைத் தர ஒன்றிய அரசு மறுக்கிறது என்று தமிழ்நாட்டின் குரலாக ஒலித்தவர்தான் நம்முடைய போற்றுதலுக்குரிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர் நெல்லைத் தமிழில் பேசுவார்; நல்ல தமிழில் பேசுவார். (மேசையைத் தட்டும் ஒலி) 'வாருங்கள், போயிட்டு வாருங்கள்' என்று சொல்வார். அது நெல்லைத் தமிழ்; நல்ல தமிழ். திருநெல்வேலிக்கு என்று ஒரு வரலாறு இருக்கிறது. நெல்லைத் தமிழில் அழகாகப் பேசக்கூடியவர். இப்படிப்பட்ட ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை நான் பார்த்தது இல்லை.

அதுமட்டுமல்ல, கடந்த காலங்களில் மாண்புமிகு பேரவைத் தலைவர்களெல்லாம் ஒரு பக்கம் பார்த்துக் கொண்டிருப்பார்கள், இன்னொரு பக்கம் பார்க்கமாட்டார்கள் என்பதை நான் அறிந்தவன். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுடைய கண்ணும், ஏதாவது சமிக்ஞைகள், signal வருகிறதா என்று ஒரு பக்கம் பார்த்த வரலாறு இருந்ததாக நான் அறிவேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், இரண்டு பக்கமும் பார்க்கிறார். இரண்டு பக்கக் கருத்துகளையும் கேட்கிறார். நான் பேச மறந்ததையெல்லாம் அவர் பேச ஆரம்பித்துவிடுகிறார். அப்படிப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களை நாம் பெற்றிருக்கிறோம். ஒரேயொரு உதாரணத்தைச் சொல்கிறேன். இன்று காலையில் கேள்வி நேரம். (குறுக்கீடுகள்)

முற்பகல் 11–20

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினர்கள், அமைதியைக் கடைபிடிக்கவும்.

திரு. கு. செல்வபெருந்தகை: இன்று காலையில் கேள்வி நேரம். இன்று கேள்வி நேரத்தில், மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களுடைய கேள்வி–பதில். மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களின் கேள்வி–பதிலில், நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் கேள்வியாக

[திரு. கு. செல்வபெருந்தகை] [2025 மார்ச் 17

ஒரு மாண்புமிகு மேனாள் அமைச்சர் அவர்கள் கேட்டார்கள். நான் பேரவைத் தலைவராக இருந்தால்கூட அனுமதிக்க மாட்டேன். அவர் சட்டமன்ற உறுப்பினர் மட்டுமல்ல, மேனாள் அமைச்சர். அவர் நகர்ப்புற மேம்பாட்டுத் துறை சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களின் கேள்வியை, வீட்டு வசதித் துறை அமைச்சரிடம் கேட்டார். ஆனால், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் பக்குவமாக, பண்பாளராக இன்று என்ன சொன்னார்கள் என்றால், நீங்கள் துறையை மாற்றிக் கேட்கிறீர்கள். அதற்கு அவரே பதில் சொல்வார் என்றார். இதுதான் பேரவைத் தலைவருடைய பண்பு, வரலாறு, அவருடைய நேர்மை. (மேசையைத் தட்டும் ஒலி) இப்படிப்பட்ட ஒரு நேர்மை, எதிர்க்கட்சியினுடைய மாண்புமிகு உறுப்பினர்களையும், மேனாள் அமைச்சர்களையும் பார்க்கிற பாங்கு, பண்பு என்பது rarest of rare. அபூர்வமான பேரவைத் தலைவர் அவர்களை நாம் பெற்றிருக்கிறோம். காங்கிரஸ் பேரியக்கம் அவரை ஆதரிக்கிறது. இந்தத் தீர்மானத்தை முறியடிப்பதற்கும், எதிராக வாக்களிப்பதற்கும் நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று சொல்லி, விடைபெறுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சிந்தனை செல்வன் அவர்கள்.

திரு. ம. சிந்தனை செல்வன்: மாண்பமை பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றம், ஜனநாயகம் என்கிற மிக உன்னதமான விழுமியத்தின் ஓர் அடையாளமாக இருக்கிறது. இந்த அடையாளத்தை விதிகளின் அடிப்படையிலும், மரபுகளின் அடிப்படையிலும் பாதுகாக்க வேண்டிய பெரும் பொறுப்பு மாண்பமை பேரவைத் தலைவர் அவர்களுக்கு இருக்கிறது. அந்தப் பொறுப்பை மிகச் சிறப்பாகச் செய்து வருகிற ஓர் ஆகச் சிறந்த ஆளுமையாக மாண்பமை பேரவைத் தலைவர் திரு. அப்பாவு அவர்களை நாங்கள் பார்க்கிறோம்.

பேரவைத் தலைவரின் நடவடிக்கைகளுக்கு முன்னால் இந்தப் பேரவை எவ்வாறு இயங்குகிறது என்பது குறித்து சுருக்கமாக எனது கருத்தைப் பதிவு செய்ய விரும்புகிறேன். இதற்கு முன்னதாக நாங்கள் கேள்விப்பட்ட வடிவத்தில், ஒரு திருமண நிகழ்வில்கூட மாற்றுக் கட்சி அல்லது எதிர்க்கட்சி என்கிற நிலையிலே இருக்கிறவர்கள் அழைக்கப்படாமல்

2025 மார்ச் 17] [திரு. ம. சிந்தனை செல்வன்]

தவிர்க்கப்படுகிற ஓர் இறுக்கம் கடந்த காலத்தில் இருந்ததை, பேரவைக்கு வந்து பார்க்காத ஒரு கடைசி மனிதன் என்கிற அடிப்படையிலே நான் அறிவேன். ஆனால், இந்தப் பேரவையின் தொடக்க நிகழ்விலேயே, மாண்பமை முதல்வர் அவர்கள் உள்ளே வருகிறார்; தன்னுடைய அவை சார்ந்த அமைச்சர்களுக்கு வணக்கம் சொல்கிறாரோ, இல்லையோ, முதலில் எதிர்க்கட்சித் தலைவரில் தொடங்கி (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்து முன்வரிசைத் தலைவர்களுக்கும் வணக்கம் சொல்லி, அதற்குப் பிறகு தன்னுடைய அமைச்சர்களுக்கும் வணக்கம் சொல்லி, தான் வருகிறபோது எழுந்து நிற்க வேண்டாம், உட்காருங்கள் என்று சொல்கிற, அனைவரையும் ஒரு குடும்பமாகப் பார்க்கிற, ஒரு தாயுள்ளத்தோடு மாண்பமை முதல்வர் அவர்கள் இந்தப் பேரவையை வழிநடத்துவதைப் பார்த்து நான் வியந்திருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஒரு தோழமைக் கட்சியினுடைய அடையாளம் என்கிற அடிப்படையில் நான் இதைச் சொல்லவில்லை. தமிழ்ச் சமூகத்தின்மீது அக்கறை இருப்பதன் அடிப்படையிலே சொல்கிறேன். ஒரு மாபெரும் கலாச்சார மாற்றம், ஒரு பண்பாட்டு மாற்றம் இந்தச் சட்டப் பேரவையிலே உருவாகியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு பக்கத்தில் பார்க்கவே மாட்டார்கள் என்று மரியாதைக்குரிய மாண்பமை சட்டப் பேரவை உறுப்பினர், காங்கிரஸ் பேரியக்கத்தின் தலைவர் அண்ணன் திரு. செல்வபெருந்தகை அவர்கள் சொன்னார்கள். ஆனால், அனைவரையும் ஈர்க்கிற ஒரு காந்தமாக, அன்பு சார்ந்த அடையாளமாக மாண்பமை முதல்வர் அவர்கள் செயல்படுவதைப் பார்க்கிறோம்.

மாண்புமிகு முதல்வர் அவர்களது ஆளுமையை நூறு விழுக்காடு உள்வாங்குபவராக, அறிவு ஆளுமை உடையவராக விளங்குகிறார். ஒரு சபையை வழிநடத்திச் செல்வதற்கு அறிவு ஆளுமை தேவைப்படுகிறது. தமிழ்ச் சமூகத்தின் நீண்ட நெடிய கால சமூக நீதி தொடர்பான தனித்துவமான கொள்கை தெளிவு தேவைப்படுகிறது. இந்த அறிவு ஆளுமையும், கொள்கைத் தெளிவும் அனைவரையும் உள்ளடக்குகிற பண்பும் நிறைந்தவராக மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் செயலாற்றி வருகிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு இந்த மாமன்றத்தில் நான் பதிவு செய்ய கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. ம. சிந்தனை செல்வன்] [2025 மார்ச் 17 முற்பகல் 11–25

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஜனநாயகம் என்கிற விழுமியம் குறித்து நான் இன்னும் கூடுதலாக அறிந்துகொள்ள வேண்டிய தேவை இருக்கிறது. மன்னர்கள் ஆண்ட காலம் என்பது மாறி, மக்களே உருவாக்கிக் கொண்டிருக்கிற அரசியல் சாசனம், நாடுகளை ஆளத் தொடங்குகிற அந்த வடிவம்தான் ஜனநாயகம் என்கிற சொல்லாக, விழுமியமாக புரிந்துகொள்ளப்பட்டிருக்கிறது. அத்தகைய ஜனநாயகத்தின் மிக முக்கியமான மாண்பு என்பது, புரட்சியாளர் அம்பேத்கர் சொன்னதைப்போல, inclusive democracy–உள்ளடக்குகிற ஜனநாயகம். பெரும்பான்மையினரின் உணர்வுகள் மட்டுமே ஆள்வது அல்ல ஜனநாயகம்; சிறுபான்மை மக்களின் உணர்வுகளையும் உள்ளடக்குவது என்பதுதான் ஜனநாயகத்தின் சிறப்பு என்பது புரட்சியாளர் அம்பேத்கருடைய கருத்து. அந்தக் கருத்தியலை மிகச் சிறப்பான முறையிலே உள்வாங்கி, எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கக்கூடியவர்கள் பேசுவதற்குக் கூடுதல் வாய்ப்புகளைத் தாருங்கள் என்று தொடர்ந்து அதற்கான இசைவைத் தரக் கூடியவராக மாண்பமை அவை முன்னவர் அவர்கள், காலம் நமக்குத் தந்திருக்கின்ற ஒரு மிகப் பெரிய பேராளுமை என்று நான் கருதுகிறேன்.

அத்தகைய பண்பு நிறைந்த இந்த அவையில் இன்று கொண்டுவரப்பட்டிருக்கிற இத்தீர்மானம் என்னைப் போன்றவர்களுக்கு, ஒரு cultural shock என்று சொல்வார்களே, அதுபோல் திடீரென, எதிர்பாராமல் ஏற்படுகிற ஓர் அதிர்வாகவே இருக்கிறது. ஆகவே, ஜனநாயக பண்பு நிறைந்திருக்கிற மாண்பமை சட்டப் பேரவைத் தலைவர் அவர்களை மனம் நிறைந்து பாராட்டி, அவர்களுடைய செயல்பாடுகள் தொடர்ந்து உள்ளடக்குகிற ஜனநாயகத் தன்மையோடு தொடர வேண்டுமென வாழ்த்தி, இந்தத் தீர்மானத்தை கடுமையாக, முழுமையாக எதிர்த்து, விடுதலை சிறுத்தைகள் கட்சி பதிவு செய்து, விடைபெறுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள்.

2025 மார்ச் 17]

திரு. வி.பி. நாகைமாலி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காட்சிக்கு எளியவராக, கடுஞ்சொல் அற்றவராக இந்தச் சபையினுடைய மாண்பைக் காத்து, சட்டமன்ற உறுப்பினர்களுடைய உணர்வுகளுக்கு மதிப்பளித்துச் செயல்பட்டுக் கொண்டிருக்கிற நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்மீது, இங்கு கொண்டு வந்திருக்கிற இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் வரலாற்றிலே ஒரு துரதிருஷ்டவசமானது என்பதை முதலிலே நான் பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

கடந்தகால வரலாற்றை உங்களுக்கு நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். இதோ, இந்த அவையிலே கடந்த காலத்திலே, ஒரு பேரவைத் தலைவர் இருந்தார். அப்பொழுது பேரவைத் தலைவருக்கு என்ன அதிகாரம் இருக்கிறது, எவ்வளவு அதிகாரம் இருக்கிறது என்கிற ஒரு கேள்வி எழுந்தபோது, அந்தப் பேரவைத் தலைவர் சொன்னார், 'sky is the limit', பேரவைத் தலைவருக்கு எல்லையற்ற அதிகாரம் இருக்கிறது என்று சொன்னார். அது யார் என்று நான் சொல்ல விரும்பவில்லை. 'வானமே எல்லை' என்று சொன்னார். 'வானளாவிய அதிகாரம் இருக்கிறது' என்று சொன்னார். ஒருவர், ஒருவருக்கு எல்லையற்ற அதிகாரம் இருக்கிறது, வானளாவிய அதிகாரம் இருக்கிறது என்று சொன்னால், அதனுடைய பொருள் எதேச்சதிகாரத்தின் உச்சம். அப்படியான பேரவைத் தலைவர் இருந்த இடத்திலே இன்றைக்கு மரியாதைக்குரிய, எல்லோரையும் அரவணைத்துச் செல்கிற ஓர் அற்புதமான பேரவைத் தலைவர் நமக்குக் கிடைத்திருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–30

ஒரு முறை நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சொன்னார், இதை எதிர்க்கட்சித் தலைவர்தான் அன்றைக்கு சொன்னார்கள். எங்களுக்குப் பேசுவதற்கு நீங்கள் வாய்ப்பளிக்கவில்லை என்று சொன்னபோது, அவர் சொன்னார், அப்படி சொல்லக்கூடாது; என்னுடைய இரண்டு கண்களாக அவையில் இருக்கிற உறுப்பினர்களை நான் பார்க்கிறேன்; ஒரு கண் ஆளுங்கட்சி உறுப்பினர்; இன்னொரு கண் எதிர்க்கட்சி உறுப்பினர் என்று நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சொன்னபோது நாங்கள் தமாஷாகச் சொல்லிக் கொண்டிருந்தோம். ஆளுங்கட்சிக்கு

[திரு. வி.பி. நாகைமாலி] [2025 மார்ச் 17

ஒரு கண்ணையும், எதிர்க்கட்சிக்கு ஒரு கண்ணையும் கொடுத்துவிட்டால், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் தோழமைக் கட்சிக்கு எந்தக் கண்ணைக் கொடுப்பார்கள்! நெற்றிக் கண்ணை நிச்சயமாகக் கொடுக்க மாட்டார்கள், கடைக் கண்ணை எங்களுக்குக் கொடுப்பார்கள் என்று நாங்கள் தமாஷாகப் பேசிக்கொண்டிருந்தோம். (குறுக்கீடுகள்) இருங்கள், பேச விடுங்கள். அப்படியோர் அற்புதமான பேரவைத் தலைவர், நமது மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள். பேரவையில் கேள்விகளைக் கேட்கிறபோது, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் மத்தியில் சில நேரங்களில் தடுமாற்றம் ஏற்படும். அந்த நேரங்களில், மாண்புமிகு அமைச்சர்கள் சரியாகப் பதில்களைச் சொல்லக்கூடிய அளவிற்கு, அந்தக் கேள்விகளை முறைப்படுத்தி உறுப்பினர்களுக்கு உதவிகள் செய்யக்கூடிய ஓர் அற்புதமான பேரவைத் தலைவர் அவர்கள் நமக்குக் கிடைத்திருக்கிறார்கள். ஆகவே, அவர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவதென்பது, அவர்மீது இருக்கிற ஒரு காழ்ப்புணர்ச்சியால் கொண்டு வரப்பட்டுள்ளது என்பதை இந்த அவையில் நான் பதிவு செய்து, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்குப் பின்னால், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நிற்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்து, இந்தத் தீர்மானத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் வன்மையாக * எதிர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்கள்.

திரு. ட்டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் பொது வாழ்க்கைக்கு வருவதற்கு முன்பாக, பள்ளி ஆசிரியராகப் பணியாற்றிய சிறந்த பண்பாளர். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், பொது வாழ்க்கைக்கு வருவதற்கு முன்பாகவே, பள்ளி ஆசிரியராக, சிறந்த பண்பாளராகப் பணியாற்றியவர். ஒரு பள்ளி

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

2025 மார்ச் 17] [திரு. ட்டி. இராமச்சந்திரன்]

ஆசிரியர் வகுப்பறையில், ஒரு மாணவர் வேண்டியவர், ஒரு மாணவர் வேண்டாதவர் என்றில்லாமல், அனைத்து மாணவர்களையும் சமமாகப் பாவிப்பதைப்போன்று, இந்தப் பேரவையில் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்று பார்க்காமல், ஆளும் கட்சி, எதிர்க் கட்சி மற்றும் சக சட்டமன்ற உறுப்பினர்களை இரண்டு கண்களாகப் பாவித்து, ஆளும் கட்சிக்கு வழங்குகின்ற அளவில், எதிர்க்கட்சிகளுக்கும், சக சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் சம வாய்ப்பினை வழங்கி, இந்த அவையை, நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் நடுநிலையோடு வழிநடத்திச் செல்கிறார்கள்,. ஆகவே, இன்றைக்கு பிரதான எதிர்க்கட்சியால் காழ்ப்புணர்ச்சியோடு கொண்டு வரப்பட்டிருக்கின்ற, இந்தத் தீர்மானத்தை, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நாங்கள் நிராகரித்து, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுடைய பணி தொடர இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அவர்களுக்குத் துணையாக நிற்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தி. சதன் திருமலைக்குமார் அவர்கள். (குறுக்கீடுகள்) கடைசியில் வாய்ப்புத் தருகிறேன். இவர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடுகள்)*

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *தீர்மானத்தைத்தான் ** (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள்.*

திரு. வி.பி. நாகைமாலி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதைக் கேட்டுவிட்டுச் சொல்கிறேன். (குறுக்கீடு)*

** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

[*2025 மார்ச் 17*

திரு. வி.பி. நாகைமாலி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏதும்* unparliamentary word*-ஐ பயன்படுத்தவில்லை. (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *தீர்மானத்தை எதிர்க்கிறேன் என்று சொல்லுங்கள்.*

திரு. வி.பி. நாகைமாலி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தத் தீர்மானம் தவறானது என்று சொல்கிறேன். அந்தத் தீர்மானம் தவறானது என்று என்னுடைய கருத்தை நான் பதிவு செய்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *தீர்மானத்தை ** என்று சொன்னார்கள். (குறுக்கீடுகள்) அதை எதிர்க்கிறேன் என்று மாற்றிக்கொள்ளவும். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தி. சதன் திருமலைக்குமார் அவர்கள்.*

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆசிரியராகப் பணியாற்றி, அதுவும்,* The Father of Mathematics *என்று சொல்லக்கூடிய கணித ஆசிரியராகப் பணியாற்றி, மாணவர்களையெல்லாம், தான் பெற்ற பிள்ளைகளைப்போன்று நடத்தி, நல்லாசிரியர் விருது பெற்று, சிறந்த ஆசிரியராகத் திகழ்ந்த எங்களுக்குக் கிடைத்த சீதனம்; தெற்குச் சீமைக்குக் கிடைத்த சீதனம், நமது மாண்புமிகு பேரவைத் தலைவர் ஐயா, திரு. அப்பாவு அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

முற்பகல் 11–35

அதுமட்டுமின்றி, அவர்கள் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற இலக்கினை வகுத்து, பகுத்தறிவுச் சிந்தனையோடு, ஒருகாலத்தில் ஒடுக்கப்பட்ட மக்களுக்கும், பெண்களுக்கும் ஏற்பட்ட துன்பங்களையும், துயரங்களையும், அவர்கள் கலந்துகொள்கிற கூட்டங்களில் மிக விரிவாகப் பேசி, மக்களுடைய பாராட்டைப் பெற்றவர். 'தாமிரபரணி நாயகன்' என்று தன் தொகுதி மக்களால் பாராட்டப்பட்ட, நம்முடைய ஐயா, மாண்புமிகு திரு. மு. அப்பாவு அவர்கள், எந்த நிலையிலும்,

** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

2025 மார்ச் 17] [டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்]

எந்தக் கட்சியில் நின்றாலும் அந்தத் தொகுதியில் வெற்றிபெறும் அளவிற்குப் பெயர் பெற்றவர். (மேசையைத் தட்டும் ஒலி) சீரோடும், சிறப்போடும் வாழ்ந்து, சிறந்த நுண்ணறிவும், மதிநுட்பமும் பெற்று இந்தச் சட்டமன்றத்தை தராசுபோல் நடுநிலையோடு நடத்திக்கொண்டிருப்பவர். அனைத்துக் கட்சியினருக்கும், அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், சமமான வாய்ப்புக் கொடுத்து, பேசுவதற்கு அழைக்கின்ற தகுதி படைத்தவர். அப்படிப்பட்ட ஐயா, மாண்புமிகு திரு. மு. அப்பாவு அவர்கள், இந்தச் சட்டசபையை தலைமைத் தாங்கி நடத்துகின்ற சட்டமன்றப் பேரவைத் தலைவராக எப்போதும் இருக்க வேண்டும் என்று மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வேண்டிக்கொண்டு, எதிர்க்கட்சிக் கொண்டு வந்த தீர்மானத்தை மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எதிர்த்து, அமர்கின்றேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய சபாநாயகர் என்னுடைய சாதியைச் சார்ந்தவர். எதைச் சொல்கின்றேன் என்றால், அவரும் ஓர் ஆசிரியர்; நானும் ஓர் ஆசிரியர். ஆசிரியர்கள் மாணவர்கள்மீது நிச்சயமாகக் கனிவிரக்கம் கொண்டவர்கள். அந்த கனிவிரக்கத்தின் காரணமாக, மாணவர்கள்மீது சில நேரங்களில் கண்டிப்பாக இருந்தாலும்கூட, அந்தக் கண்டிப்பு மாணவர்களை ஒழுங்குபடுத்தி, அவர்களை நெறிபடுத்துவதற்கான கண்டிப்பாகத்தான் இருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) அதே அடிப்படையில்தான், மிக உயர்ந்த மனிதரான நம்முடைய சபாநாயகர், உயர்ந்த சிந்தனைகளையும் தாங்கி செயல்படக்கூடிய ஓர் ஆளுமையாக விளங்குகிறார் என்பது யதார்த்தமான உண்மை. எதிர்க்கட்சி, ஆளும்கட்சி என்ற பாகுபாடு இல்லாமல், அனைவரையும் நடுநிலையோடுதான் அவர் கையாண்டு வந்திருக்கின்றார் என்பது தெளிவான உண்மை. காரணம், இங்கு சில நேரங்களிலே ஆளும்கட்சி அல்லது தோழமைக் கட்சி உறுப்பினர்களுக்கு, அது வரவு-செலவுத் திட்டம் குறித்த விவாதமாக இருக்கட்டும் அல்லது மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதமாக*

[முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா] [2025 மார்ச் 17

இருக்கட்டும், எங்களுக்குக் கொடுக்கக்கூடிய வாய்ப்பைவிட அதிகமாக எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்குக் கொடுத்திருக்கிறார் என்பது இந்தச் சபையினுடைய பதிவேடுகளைப் பார்க்கும்போது தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) சில நேரங்களில் பசியோடு 4-00 மணி, 4-30 மணி வரைக்கும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களின் பேச்சை அமைதியாக உட்கார்ந்து, இங்கே இருக்கக்கூடியவர்கள் கேட்டிருக்கின்றோம் என்பதும் இந்தச் சபை கண்ட உண்மையாக இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் எடுத்துச் சொல்ல விரும்புகின்றேன். மிகத் தெளிவான ஞானம் உடையவர்; நல்ல நினைவாற்றல் உடையவர்; நாட்டு நடப்புகளை தன்னுடைய விரல்நுனியில் வைத்துக்கொண்டிருக்கக்கூடியவர். அந்த விஷயங்கள் எல்லாம் விவாதங்களின்போது, இடையிலே வந்து இந்தச் சபையினுடைய விவாதங்களுக்கு மெருகூட்டுகின்றன என்பதுதான் யதார்த்தமான உண்மையாக இருக்கின்றது. எனவே, மாண்புமிகு சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் முன்மொழிந்த நம்முடைய சபாநாயகர் மாண்புமிகு திரு. மு. அப்பாவு அவர்கள் மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை மனிதநேய மக்கள் கட்சியின் சார்பாக எதிர்த்து, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.

முற்பகல் 11-40

***திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைப் பொறுத்தவரையில், கொஞ்சம் விவரமானவர்; நிறைய விஷயங்கள் தெரிந்தவர். அதனாலேயே, சில நேரங்களில் சுட்டிக்காட்டக்கூடியவராக அவர் இருக்கின்றார். விவரம் தெரியவில்லையென்றால், ஒன்றும் தெரியாமல் அமர்ந்துவிடுவார்கள். ஆனால், விவரம் தெரிகின்ற காரணத்தினால், ஏதாவது விஷயங்களைச் சுட்டிக்காட்டுகின்றார். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த காலங்களிலே இந்தப் பேரவை எப்படி நடைபெற்றிருக்கிறது என்பதை நான் கேள்விப்பட்டிருக்கின்றேன். கடந்த காலங்களைவிட, இப்போது ஜனநாயகத்தோடு இந்தப் பேரவை நடைபெறுகிறது என்பதையும், கடந்த நான்கு

2025 மார்ச் 17] [திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்]

ஆண்டுகளாக நான் பார்த்துக்கொண்டிருக்கிறேன். ஒன்றை மட்டும் கவனத்தில் கொள்ள வேண்டும். ஒரு விரலைத் தூக்கிச் சுட்டிக்காட்டும்பொழுது, மீதி விரல்கள் எல்லாம் நம்மை நோக்கி இருக்கின்றன என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் ஆசிரியராக இருந்தவர் என்பது எல்லோருக்கும் தெரியும். எந்த மாணவனும் படிக்கும்போது தன்னுடைய ஆசிரியரை நல்லவர் என்று சொல்வதில்லை. அப்படியே சொன்னாலும், எல்லா மாணவர்களும் சொல்வதில்லை. ஆனால், பிற்காலத்திலே வாழ்க்கையிலே முன்னேறும்போது, அந்த ஆசிரியருடைய பெருமை, அன்றைக்கு மாணவர்களுக்கு ஒப்பிட்டுப் பார்க்கும்போது தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள்மீது மிகவும் கனிவோடும், அன்போடும் இருக்கிறார் என்று சொன்னால், ஐந்தாண்டு காலம் அவருக்கு நீதி மறுக்கப்பட்டிருக்கிறது. அவரைப் பொறுத்தவரை சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னரும், நீதி தாமதப்படுத்தப்பட்டு, சட்டமன்ற உறுப்பினராகச் செயல்பட முடியாதவராக அவர் இருந்திருக்கிறார். அப்படிப்பட்டவருக்கு ஒரு சட்டமன்ற உறுப்பினருடைய எண்ணங்களும், உணர்வுகளும் தெளிவாகப் புரியும். அதனால்தான், அவர் அவ்வளவு அன்போடும், பாசத்தோடும் இருக்கிறார். நாம் சபையிலேயே பார்த்திருக்கிறோம். சபையிலே தோழமைக் கட்சித் தலைவர், என்னுடைய நண்பர் திரு. தி. வேல்முருகன் அவர்கள், மாண்புமிகு பேரவைத் தலைவரோடு சண்டை போட்டதைப்போல, பேரவைத் தலைவருடன் யாருமே சண்டை போட்டிருக்க வாய்ப்புக் கிடையாது. தோழமைக் கட்சியாக இருந்தாலும், கண்டிப்போடு, இந்த சபையை நிர்வகித்தவர். அப்படி ஜனநாயக முறைப்படி, சபையை நடத்திக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை நான் பாராட்டுகின்றேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கொண்டுவந்திருக்கின்ற இந்தத் தீர்மானத்தை எதிர்க்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.*

[*2025 மார்ச் 17*

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்மீது கொண்டுவரப்பட்டிருக்கின்ற பதவி நீக்கம் செய்ய வேண்டுமென்கிற இந்தத் தீர்மானத்தை நான் எதிர்க்கிறேன். ஆனால், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தன் உரையில் குறிப்பிட்ட பல்வேறு அம்சங்களில் ஒரு சில அம்சங்கள் எனக்கு உடன்பாடானது; நான் ஒரு சட்டப் பேரவை உறுப்பினராகவும், ஒரு பத்திரிகையாளனாகவும் இருந்து, தமிழ்நாட்டின் முன்னணி இதழ்களில், கடந்த காலங்களில் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிக் கட்டிலில் இருந்த போதும், மறைந்த மாண்புமிகு அம்மையார் அவர்கள் ஆட்சிக் கட்டிலில் இருந்தபோதும், இந்த அவையின் நடவடிக்கைகளை, ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினர்களின் நடவடிக்கைகளை மாண்புமிகு பேரவைத் தலைவர், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், பேரவையினுடைய கொறடா, மாடத்தில் அமர்ந்திருக்கின்ற அரசு அதிகாரிகள் இவர்களையெல்லாம் குறித்து, மிக விரிவாக தமிழ்நாட்டின் முன்னணி இதழ்களில் விமர்சனம் செய்து எழுதியவன். அந்த அடிப்படையில் நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் ஆசிரியராக இருந்து பணியாற்றிய ஒருவர். அதே ஆசிரியர் தொனியில் இந்தச் சட்டமன்றத்தை பல நேரங்களில் நடத்தியிருக்கிறார். அதை நான் தவறு என்று கூறமாட்டேன். நம்முடைய திருநெல்வேலி பாஷை என்று சொல்வார்கள்; Slang என்று சொல்வார்கள். அந்த slang-ல் உரிமையோடு கண்டித்திருக்கிறார். ஆனால், அவரோடு நான் சண்டையிடவில்லை. நான் பல விடயங்களில் முரண்பட்டிருக்கிறேன். சட்ட மசோதாக்கள் நிறைவேறுகின்ற போது, வாய்ப்புத் தர வேண்டுமென்று கேட்டிருக்கிறேன். கொஞ்சம் கூடுதல் நேரம் தாருங்கள் என்று கேட்டிருக்கிறேனே தவிர, அவருடைய அவை நடவடிக்கைமீது நான் எந்த விமர்சனத்தையும் முன்வைக்கவில்லை.

அதேநேரத்தில், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், இந்தியாவில் இருக்கின்ற ஒரு தேசியக் கட்சியின் பிரதிநிதியாக இருந்ததோடு மட்டுமல்லாமல், ஒரு தனி மனிதனாக, ஒரு சுயேச்சை வேட்பாளராக நின்று, அத்தொகுதியினுடைய மக்கள் மனங்களை வென்ற ஒரு மகத்தான அரசியல்வாதியாக நம் கண்முன் இருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) நான் அவரோடு இரண்டு முறை இந்த அவையில் பணியாற்றியிருக்கிறேன்.

2025 மார்ச் 17] [திரு. தி. வேல்முருகன்]

எங்களோடு குழுவிலே உறுப்பினராக இடம் பெற்றபோது, அவர் உள்ளத்தில் பட்டதை மிக வேகமாக, வீரியமாக எடுத்து வைக்கக்கூடிய ஆற்றலைக் கண்டு நான் அவரிடம் சில படிப்பினைகளையும் கற்றுக்கொண்டிருக்கிறேன். நான் தமிழ்நாடு முழுவதும் தலைவர் கலைஞர் அவர்கள் எனக்குக் கொடுத்த அரசு உறுதிமொழிக் குழுத் தலைவர் பதவியிலும் சரி, மாண்புமிகு அம்மையார், முன்னாள் முதலமைச்சர் அவர்களின் ஆட்சியின்போது, டெல்லியிலே துணைத் தலைவராக இருந்த தம்பிதுரை அவர்கள், அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவராக இருந்தபோது, வேலையின் காரணமாக, அவரால் அந்தப் பணியை செய்ய முடியாத காரணத்தால், அந்தப் பொறுப்பையும், அப்போதைய முதலமைச்சர் எனக்கு வழங்கி நான் நடத்திய போதும், அவரோடு நான் பணியாற்றியிருக்கிறேன். அவரைப் பொறுத்தவரையில், மிகவும் நேர்மையாக, நியாயமாக, மனதில் பட்டதை பட்டென்று சொல்லக்கூடியவர். அதேபாணியில்தான் நானும், தவறு என்றால், 'அது தவறு' என்று சொல்லக்கூடியவன். இந்த விடயங்களில்தான் முரண்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11–45

அந்த வகையில் நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் இந்தியாவில் இன்றைக்கு ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிற பாரதிய ஜனதா அரசின் சபாநாயகர்கள் மாநாட்டிலும்கூட, தமிழ்நாட்டையும், தமிழர் நலனையும், தமிழ்நாட்டின் உரிமைகளையும், சட்டமன்ற மாண்புகளையும் ஒரு துளிகூட விட்டுக்கொடுக்க முடியாத ஒரு மாபெரும் பேரவைத் தலைவராக விளங்கியிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய பேரவை முதன்மைச் செயலாளரோடு உலகத்தின் பல நாடுகளுக்குச் சென்று, இந்த பேரவையினுடைய மாண்புகளை மிகச் சிறப்பாக, தனக்கே உரிய நெல்லை மொழியில், தெரிந்த ஆங்கிலத்தில் சிறப்பாக முன்வைத்திருக்கிறார். ஆக, மக்கள் மனங்களை தொகுதியில் வென்றவர். எனக்கெல்லாம் ஒரு பெரிய மகிழ்ச்சி. கடந்த இரண்டு முறை, தலைவர் கலைஞர் ஆட்சியிலும், அம்மையார் ஆட்சியிலும், ஒரு சட்டமன்ற உறுப்பினராக நான் இந்த அவையைப் பார்த்திருக்கிறேன். தளபதி அவர்களுடைய இந்த ஆட்சிக் காலத்தில்தான், நம்முடைய அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக

[திரு. தி. வேல்முருகன்] [2025 மார்ச் 17

இருக்கின்ற இந்தக் காலத்தில்தான், நம்முடைய எதிர்க்கட்சி உறுப்பினர்கள், ஆளுங்கட்சி உறுப்பினர்கள், கூட்டணிக் கட்சி உறுப்பினர்கள், மாண்புமிகு அமைச்சர்கள் என யாரும் எந்தவித வித்தியாசமும் இல்லாமல் கைகுலுக்கி, நன்றி பாராட்டிக்கொள்கிற தமிழினத்தின் மிகப் பெரிய ஒரு நாகரிகத்தை, ஒரு பண்பாட்டைப் பார்க்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு எதிர்க்கட்சி வரிசையில் உள்ள உறுப்பினர்களை அனுமதித்த நம்முடைய திரு. எடப்பாடியார் அவர்களுக்கும், எதிர்க்கட்சித் துணைத் தலைவர், எதிர்க்கட்சிக் கொறடா உள்ளிட்ட இரண்டாம் கட்டத் தலைவர்களுக்கும் நன்றி சொல்கிறேன். அதற்குக் காரணம், கடந்த காலங்களில், ஒரு தி.மு.க. அமைச்சரிடம் போய் நிற்பதா; தி.மு.க. அமைச்சர்களின் இல்ல விழாக்களிலே பங்கெடுப்பதா என்று இருந்த சூழல், தற்போது நம்முடைய அண்ணன் தளபதி அவர்களுடைய ஆட்சியில், திரு. எடப்பாடியார் அவர்களுடைய எதிர்க்கட்சி வரிசையில் மாற்றப்பட்டிருக்கிறது. இந்த மாண்பு தொடர வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அதேபோன்றுதான், நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அறையிலும் நம்மை நடத்துகிறார். நான் இங்கே கடுமையாகச் சண்டையிட்டுவிட்டு, கோபமாகச் செல்வேன்; அவரது ஒரு பிள்ளை வயதுதான் எனக்கு; அவர், மகனே என்றுதான் என்னை அழைப்பார்; எழுந்து நின்று வரவேற்பார். என் மகனுக்கு என்ன கோரிக்கை, கொடுங்கள் என்று கேட்பார். வேல்முருகனிடம் காட்டுகின்ற அதே பரிவுதான், இங்கிருக்கிற அனைவரிடத்திலும் பேரவைத் தலைவர் தனது அறைக்குள் காட்டுகிறார்.

இந்தப் பேரவையில் 234 சட்டமன்ற உறுப்பினர்களைக் கையாள வேண்டும்; குறித்த நேரத்தில் பேரவையை நிறைவு செய்ய வேண்டுமென்கிற பொறுப்புணர்வோடு அவர் நடந்துகொள்கிற ஒரு கண்டிப்பாகத்தான் இதை நான் எடுத்துக்கொண்டிருக்கிறேன். வெளியில்கூட, பத்திரிகையாளர்களிடம் பேரவைத் தலைவர் குறித்து விமர்சனம் செய்வேன்; அதை அவர் நேரடி ஒளிபரப்பில் live ஆகப் பார்த்துவிட்டுச் சொல்வார், 'என் மகன் என்னை வெளியிலே திட்டிவிட்டு, உள்ளே என்னிடம் வருகிறான் பார்' என்று சொல்வார். 'வருகிறான், போகிறான்' என்கிற அந்தச் சொற்கள் சுயமரியாதை இயக்கத்திலிருந்து

2025 மார்ச் 17] *[திரு. தி. வேல்முருகன்]*

தோன்றி வளர்ந்த வேல்முருகனுக்கு கொஞ்சம் தன்மானத்தில், கொஞ்சம் சுயமரியாதையில் கோபம் வரும்; ஆனால், அது தென் மாவட்ட மொழிக்குரியது என்கிற பெருமையோடு நான் கடந்து செல்கிறேன். அந்த வகையில், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுடைய மாண்பை, அவருடைய பல்வேறு நடவடிக்கைகளில் நாம் கண்டிருக்கிறோம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் அறையிலும் நாம் கண்டிருக்கிறோம். என்மீதும் பேரவைத் தலைவர் கோபித்துக் கொண்டார் என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் என் பெயரையும் பயன்படுத்திச் சொன்னதற்காக, அவருக்கு நன்றி சொல்கிறேன். எதிர்க்கட்சியினர் என்பதால் நீங்கள் சுட்டிக்காட்ட வேண்டிய இடத்தில் இருக்கிறீர்கள்; அதைச் சுட்டிக்காட்டுகிறீர்கள்; அந்த ஜனநாயக மாண்போடு இந்த அவை அதை ஏற்றுக்கொள்கிறது. அதேநேரத்தில், அவரைப் பதவி நீக்கம் செய்ய வேண்டுமென்ற அளவிலான இந்தத் தீர்மானத்தை நான் எதிர்க்கிறேன். வாய்ப்புக்கு நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ஜெகன் மூர்த்தி அவர்கள்.*

திரு. மு. ஜெகன் மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவையின் பிரதான எதிர்க்கட்சியான அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், பேரவைத் தலைவரை நீக்க வேண்டும் என்று கொண்டு வந்திருக்கிற தீர்மானத்தை, சட்டமன்ற பிரதான எதிர்க்கட்சித் துணைத் தலைவர் மாண்புமிகு அண்ணன் திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்கள் முன்மொழிந்த இந்தத் தீர்மானத்தையும், தீர்மானத்தின்மீது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறியிருக்கிற அந்தக் குற்றச்சாட்டுகளையும் நான் ஆதரிக்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்களால், மாண்புமிகு திரு. மு. அப்பாவு அவர்களைப் பேரவைத் தலைவர் பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானம் தற்போது விவாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.*

[திரு. மு.க. ஸ்டாலின்] [2025 மார்ச் 17

மக்கள் நம்பிக்கையை இழந்தவர்களால் இப்படி ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டிருப்பதைப் பார்த்து மக்களே நகைப்பார்கள் என்பதுதான் உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–50

கடந்த 2017 ஆம் ஆண்டு இதேபோன்று ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டது. அப்போது, 'தமிழக சட்டமன்ற வரலாறு நூற்றாண்டு விழாவினை இன்னும் 4 ஆண்டுகளில் காணப் போகிறது' எனக் கூறித் தொடங்கினேன். இன்றைக்கு 'நூற்றாண்டு விழாவினைக் கண்டு 4 ஆண்டுகளாகின்றன' எனக் கூறித் தொடங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இப்பேரவை நூற்றாண்டு விழா கண்டுள்ளது. இங்கே நம்மையெல்லாம் உருவாக்கி, பாடமாக நின்றுகொண்டிருக்கிறாரே, அந்தத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) 'யாரும் யார்மீதும் விமர்சனம் வைக்கலாம், ஆனால், என்றாவது ஒருநாள் அவரை நேரில் சந்திக்க வேண்டும் என்பதை மனதில்வைத்து விமர்சியுங்கள்' என்று சொன்னவர் தலைவர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால்தான் அவரை, "படமாக இல்லை; பாடமாக நிற்கிறார்" என்று நான் குறிப்பிட்டேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவரது நூற்றாண்டைக் கொண்டாடும் வேளையில், இப்பேரவையின் தலைவராகப் பணியாற்றும் வாய்ப்பை திரு. மு. அப்பாவு அவர்கள் பெற்றிருக்கிறார்.

2017 ஆம் ஆண்டு என்னால் இதுபோன்ற ஒரு தீர்மானம் கொண்டு வரப்பட்டதை எண்ணி நான் அன்றைக்கு வருந்தினேன் என்று என் உரையிலே பதிவு செய்திருக்கிறேன். ஆனால், இத்தீர்மானம் இன்றைக்குக் கொண்டு வரப்பட்டதன்மூலம் கடந்த பேரவைகளின் செயல்பாடுகள், அன்றைய பேரவைத் தலைவர் ஜனநாயகத்தை மதியாது நடந்துகொண்ட முறைகளைப் பற்றியும், இங்கேயுள்ள நம்முடைய பேரவை முன்னவர் உள்ளிட்ட பல்வேறு உறுப்பினர்களுக்கும், ஏன், நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும்கூட நன்றாகத் தெரியும். நான் மீண்டும் அதைச் சொல்ல விரும்பவில்லை. ஆனால், அவற்றோடு தற்போதைய பேரவைத் தலைவரின் செயல்பாடுகளை ஒப்பீடு செய்து, நம்முடைய பேரவைத் தலைவர் எவ்வாறு நடுநிலையோடு செயல்படுகிறார்

2025 மார்ச் 17] [திரு. மு.க. ஸ்டாலின்]

என்பதை மக்கள் புரிந்துகொள்ளும் வாய்ப்பாக இந்த விவாதத்தைக் கருதுகிறேன்.

2006–2011 ஆம் காலகட்டத்தில் நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும் இந்த அவையில் உறுப்பினராக இருந்திருக்கிறார். அப்போது நான் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சராக பணியாற்றியிருக்கிறேன். அப்போதிலிருந்தே எனக்கு அவரை நன்றாகத் தெரியும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் ஜனநாயகக் கொள்கைகளில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். மற்றவர்கள் மனம் வருந்தாத அளவில், தன்னுடைய நடவடிக்கைகளை அமைத்துக்கொள்பவர். நேர்மையாக கருத்துகளை ஆணித்தரமாக முன்வைக்கக்கூடிய பண்பு கொண்டவர். அவரது நடுநிலையோடு நிற்கக்கூடிய நேர்மைத் திறனும், அனைவரிடமும் சிரித்த முகத்தோடு பழகக்கூடிய பாங்கும் என்னைக் கவர்ந்த காரணத்தால்தான், அவரை இப்பதவிக்கு நான் முன்மொழிந்தேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆசிரியராக இருந்து அரசியலுக்கு வந்தவர் நம்முடைய மாண்புமிகு திரு. அப்பாவு அவர்கள். கனிவானவர், ஆனால் அதேநேரத்தில் கண்டிப்பானவர். இவை இரண்டுமே பேரவைக்குத் தேவை என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்வீர்கள் என்று நான் நினைக்கிறேன். இவை இல்லாவிட்டால் அவையைக் கண்ணியத்துடனும், கட்டுப்பாட்டுடனும் நடத்த இயலாது. அதுபோல பேரவையை நடத்திவிட முடியாது.

இந்த அவையில் என்னுடைய தலையீடோ அல்லது அமைச்சர்களின் தலையீடோ, பேரவை நடவடிக்கைகளில் இல்லாத வகையில்தான் பேரவைத் தலைவர் மாண்புமிகு திரு. அப்பாவு அவர்கள் நடந்து வருகிறார்கள். கடந்த காலங்களில் நடைபெற்றதுபோல் அல்லாமல், ஜனநாயக அமைப்பின் பிரதிநிதிகளான சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றே என நினைத்து செயலாற்றி வருகிறார்கள். எதிர்க்கட்சி உறுப்பினர்களிடம் பாசம், பற்று கொண்டு செயல்படுபவர் நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள் என்பதை மனசாட்சியோடு சிந்திக்கக் கூடியவர்கள் ஒப்புக்கொள்வார்கள். பேரவைத் தலைவருக்கு அருகிலே வந்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அன்போடு பேசியது இந்தப் பேரவை உறுப்பினர்கள் அனைவரும் பார்த்த காட்சிதான்.

[திரு. மு.க. ஸ்டாலின்] [2025 மார்ச் 17

சில எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கண்ஜாடையாகக்கூட பேசி நான் பார்த்திருக்கிறேன். தங்கள் எண்ணத்தை குறிப்பால் உணர்த்துவதையும் உங்களில் பலரும் பார்த்திருக்கலாம்.

எங்களைப் பொறுத்தவரையில், விவாதங்களில் விருப்பு, வெறுப்பின்றி நாகரிகமாக வாதங்களை வைக்க வேண்டும் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 23–3–2017 அன்று இந்த அவையில் நான் பேசியதை எண்ணிப் பார்க்கிறேன்; எத்தனை விதிமீறல்கள், மரபுகளிலிருந்து விலகல்கள் என்று என்னுடைய உரையில் அன்றைக்கு நான் சுட்டிக்காட்டியுள்ளேன். நினைத்துப் பார்த்தாலே நெஞ்சம் சுடுகிறது. அதனை அனைவரும் படித்துப் பார்க்க வேண்டும். அதுமாதிரியா இன்றைக்கு நடக்கிறது என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். நான் அன்றைக்கு உள்ளபடியே வேதனைப்பட்டேன். அந்த வேதனையின் வெளிப்பாடாகத்தான் அது மீண்டும் தொடரக் கூடாது என்று நான் முடிவெடுத்தேன். இந்த அவையில் அதுமாதிரி நிகழ்வுகள், விதிமீறல், ஜனநாயகத்தை புறந்தள்ளும் மரபு மீறல்கள் எதுவும் நிகழக் கூடாது என்பதில் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் நான் காட்டிய உறுதி, திரு. அப்பாவு அவர்களிடம் பொறுப்பை ஒப்படைக்கச் செய்தது. அவர்களும் முழுமையாக அதனை உணர்ந்து, பேரவைத் தலைவராக தன்னுடைய பணியை மிகச் சிறப்பாகச் செய்து வருகிறார். அனைவரையும் ஒரே கண்ணோட்டத்தோடு பார்த்து செயலாற்றுகிறார்.

முற்பகல் 11–55

இந்தத் தீர்மானம் திரு. மு. அப்பாவு அவர்கள்மீது சில அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதையொட்டி அவர்கள் வைத்த வாதங்களில் உண்மைக்கு மாறான செய்திகள் உள்ள காரணத்தால், அதனை மறுத்து, விளக்கத்தை எடுத்து வைத்து, பேரவைத் தலைவரின் நடுநிலையைப் பறைசாற்ற வேண்டிய கடப்பாடு, கடமை, பொறுப்பு முதலமைச்சருக்கும் உள்ளது; இங்கே உள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் உள்ளது. அவைக்கு ஒவ்வாத வார்த்தைகளாக பல சொற்கள் அன்றைக்குப்

2025 மார்ச் 17] [திரு. மு.க. ஸ்டாலின்]

பயன்படுத்தப்பட்டன. 'அருகதை', 'தகுதி', 'என்ன யோக்கியதை இருக்கிறது' என்று தி.மு.க. உறுப்பினர்களைப் பார்த்து அன்றைக்குப் பேசப்பட்ட அந்த வார்த்தைகள், இன்றைக்கு அவையில் பேசப்படுமானால், உடனே பேரவைத் தலைவரால் அந்த வார்த்தைகள் நீக்கப்பெற்றுள்ளன. அன்றைக்கு ஆளுங்கட்சி உறுப்பினர்கள் பேசினால் அவைக் குறிப்பில் இடம் பெறும்; தி.மு.க. உறுப்பினர்கள் பேசினால் நீக்கப்படும் என்ற நிலைமை. இன்றைக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அப்படியா நடக்கிறார்? இல்லை.

நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள் அ.தி.மு.க. உறுப்பினர்கள் பேசுகிற இதுபோன்ற ஒன்றிரண்டு வார்த்தைகளைக்கூட விட்டுவிடுகிறார். ஆளுங்கட்சி உறுப்பினர்களிடம் கண்டிப்பாக நடந்துகொள்கிறார் என அமைச்சர்கள், உறுப்பினர்கள் சொல்லும்போது, அதைக்கேட்டு உள்ளபடியே எனது மனம் மகிழ்ச்சியடைகிறது. ஏனென்றால், எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்குத்தான் அதிக வாய்ப்புகள் தர வேண்டும், அவர்கள் இந்த அரசின் செயல்பாட்டினை செம்மைப்படுத்துபவர்களாக இருக்கிறவர்கள் என்கிற காரணத்தால், தலைவர் கலைஞர் அவர்களின் வழி நடக்கும் திராவிட மாடல் அரசுக்கும் அந்த எண்ணம் உண்டு. பல நேரங்களில் கடந்தகாலங்களில் நான் பெற்ற கசப்பான உணர்வு என் நினைவுக்கு வரும்.

இங்கே, அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் கோஷமிட்டுக் கொண்டிருந்தால், தொடர்ந்து குழப்பம் விளைவித்துக் கொண்டிருந்தால் அவர்களை அமைதிப்படுத்தி, அமர வைக்கத்தான் பேரவைத் தலைவர் முயல்வாரே தவிர, முந்தைய பேரவைகளில் நாங்கள் வெளியேற்றம் செய்யப்பட்டதைப்போல, என்றும் வெளியேற்றம் செய்ய பேரவைத் தலைவர் நினைத்ததே கிடையாது.

எங்கள் கூட்டணியில் உள்ள கட்சிகளின் உறுப்பினர்கள் மானியக் கோரிக்கை மீதான விவாதங்களில் பங்குபெற, முன்பு அளிக்கப்பட்டதுபோல தனியே வாய்ப்பு அளிக்காமல், எங்கள் கணக்கிலேயே பேரவைத் தலைவர் சேர்த்துவிடுகிறார்.

[திரு. மு.க. ஸ்டாலின்] [2025 மார்ச் 17

கேட்டால், உதயசூரியன் சின்னத்தில் நின்று வென்றவர்கள் என்ற காரணத்தால் என்பார். அதுமாதிரியா முன்னர் நடந்தது?

ஒன்றிரண்டு விஷயங்களை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். கடந்த 10–1–2025 அன்று ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம் நடைபெற்றது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உரையாற்றினார்கள். 1–40 மணிக்குத் தொடங்கி 4–32 மணிக்குத்தான் முடித்தார். 2 மணி நேரம் 52 நிமிடங்கள் பேசியிருக்கிறார்.

இங்கே எதிர்க்கட்சிகள், குறிப்பாக அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் உரையாற்றுகையில் அமைச்சர்கள் விளக்கம் அளிக்க எழுந்தால், உரையை முடித்த பிறகு விளக்கம் அளிக்கலாம் என அமர வைத்திருக்கிறார். அதேநேரத்தில், எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட முன்வரிசைத் தலைவர்கள் எழுந்தால் உடன் அனுமதி அளித்திருக்கிறார். நான் குறையாகச் சொல்லவில்லை, பெருமையாகச் சொல்கிறேன். அமைச்சர்கள் குறுக்கீடும், உறுப்பினர்கள் கணக்கில் ஏற்கெனவே கடந்தகாலத்தில் வைக்கப்பட்டுள்ளது. ஆனால், உறுப்பினர் பேசுகிற நேரத்தை மட்டும் கணக்கிட்டு, இங்கே உள்ள screen–லேயே காண்பிக்கிறார்கள்.

அனைத்து வகைகளிலும் எங்களை lock செய்கிறார் என எங்கள் கட்சி உறுப்பினர்கள் சொன்னாலும், சுதந்திரக் காற்றை இந்தப் பேரவை தற்போது சுவாசிக்கிற காரணத்தால், (மேசையைத் தட்டும் ஒலி) பேரவைத் தலைவர் செயல்பாட்டினை எண்ணி மகிழ்ச்சியடைகிறேன். பேரவைத் தலைவராக மட்டுமல்ல, பேரவை கடைபிடிக்க வேண்டிய பண்பாட்டின் தலைவராக மாண்புமிகு திரு. அப்பாவு அவர்கள் செயல்பட்டுள்ளார் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) பல நாட்களில் அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்களைப் பேச அனுமதித்துவிட்டு, தி.மு.க. உறுப்பினர்கள் பேச பெயர் பட்டியலில் இடம் பெற்றிருந்தும், இன்னொரு நாள் பேசலாம் என்றும் சொல்லித் தவிர்த்திருக்கிறார்.

பேரவைத் தலைவர் அவர்களுடைய செயல்பாடுகளை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வெளிப்படையாகப் பாராட்ட

2025 மார்ச் 17] [திரு. மு.க. ஸ்டாலின்]

முடியாதிருந்தாலும் மனதிற்குள் பாராட்டிக் கொண்டுதான் இருப்பார்கள். இந்த அரசின்மீது குற்றம், குறை கூற வாய்ப்பில்லாத காரணத்தால் இப்படி ஒரு தீர்மானமா, உள்கட்சிக்குள் ஏற்பட்டுள்ள குழப்பத்தால் அதைத் திசை திருப்ப இப்படி ஒரு தீர்மானமா (மேசையைத் தட்டும் ஒலி) என்ற விவாதத்தை வெளியில் உள்ளவர்கள் நடத்தட்டும். நாம் நடத்த வேண்டாம். வெளியில் உள்ளவர்கள் நடத்தட்டும். ஆனால், இப்படி ஒருவர்மீது, இப்படி ஒரு தீர்மானம் கொண்டு வந்தோமே என்று எதிர்காலத்தில் உங்கள் மனசாட்சி உறுத்தும். அந்த வகையில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்மீது எய்தப்பட்ட அம்பாகவே கருதுகிறோம். இந்த அம்பை இந்த அவை ஏற்காது. நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தனித் தீர்மானத்தின்மீது இப்போது வாக்கெடுப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்களால் முன்மொழியப்பட்ட "மாண்புமிகு திரு. மு. அப்பாவு அவர்களைப் பேரவைத் தலைவர் பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்று இப்பேரவை தீர்மானிக்கிறது" என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

தீர்மானத்தை ஆதரிப்போர் 'ஆம்' என்க. (குறுக்கீடு)

முதலில் குரல் வாக்கெடுப்புதான். அடுத்துதான் division. முதலில் குரல் வாக்கெடுப்புதான். முதலில் குரல் வாக்கெடுப்பு நடைபெற்ற பிறகுதான் அடுத்து division. முதலில் குரல் வாக்கெடுப்பு.

ஆதரிப்போர் 'ஆம்' என்க. (ஆம்)

எதிர்ப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

எதிர்ப்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

எதிர்ப்போரே அதிகம், தீர்மானம் தோல்வியுற்றது.

தீர்மானத்தை எதிர்த்தோர் அதிகமாக இருப்பதால், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்களால் முன்மொழியப்பட்ட தீர்மானம் தோல்வியுற்றது என அறிவிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் கோரியிருப்பதை அடுத்துச்

[பேரவைத் துணைத் தலைவர்] [2025 மார்ச் 17

சொல்கிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவருடைய கோரிக்கை இப்போது சொல்லப்படும்.

நண்பகல் 12–00 முதல் பிற்பகல் 12–15

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் division கோரியிருக்கிறார். பேரவை முதன்மைச் செயலாளர் அவர்கள் அழைப்பு மணியை, அதாவது Quorum Bell-ஐ மூன்று முறை ஒலிக்கச் செய்வார்கள். அழைப்பு மணியை அழுத்துமாறு முதன்மைச் செயலாளர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

(அழைப்பு மணி மூன்று முறை ஒலிக்கப்பெற்றது.)

பேரவையின் நுழைவாயில்கள் அனைத்தையும் மூடும்படி அவைக் காவலர்களுக்கு உத்தரவிடுகிறேன். பேரவையின் அனைத்து வாயில்களும் மூடப்பட்டுவிட்டனவா?

(பேரவையின் நுழைவாயில்கள் அனைத்தும் மூடப்பெற்றன.)

பேரவை விதி 99(5)-ன்கீழ் குறிப்பிட்டுள்ளவாறு, பேரவை விதி 99(2)-ல் கூறியபடி இரண்டாவது முறையாக இப்பிரச்சினையைப் பேரவையின்முன் வைக்கிறேன். "மாண்புமிகு திரு. மு. அப்பாவு அவர்களைப் பேரவைத் தலைவர் பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்று இப்பேரவை தீர்மானிக்கிறது" என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஆதரிப்போர் 'ஆம்' என்க. (ஆம்)

எதிர்ப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

எதிர்ப்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

எதிர்ப்போரே அதிகம், தீர்மானம் தோல்வியுற்றது. (குறுக்கீடு)

குரல் வாக்கெடுப்பு மீண்டும் மறுக்கப்பெற்றுள்ளதால், எண்ணிக் கணிக்கும் முறையில் வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது. வாக்கெடுப்பு நடக்கும் நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அவரவருக்கென ஒதுக்கப்பட்ட இருக்கையிலே அமர்ந்திட வேண்டும். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் இருக்கையிலிருந்து வெளியே செல்லவோ, இன்னொருவர் இருக்கைக்குச் செல்லவோ கூடாது. வாக்கெடுப்பு முடியும்வரை அவரவர் இருக்கையிலேயே இருக்க வேண்டும்.

2025 மார்ச் 17] [பேரவைத் துணைத் தலைவர்]

நம்முடைய பேரவை 6 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அறிவீர்கள். ஒவ்வொரு பிரிவாக நான் வாக்கெடுப்பு நடத்த உள்ளேன். பேரவை விதி 99 உள்விதி (5)-ன்கீழ் தீர்மானத்தை ஆதரிப்போர் 'ஆம்' என்கிற மாண்புமிகு உறுப்பினர்களையும், தீர்மானத்தை எதிர்ப்போர் 'இல்லை' என்கிற மாண்புமிகு உறுப்பினர்களையும், நடுநிலை வகிக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்களையும் தனித்தனியே பகுதி வாரியாக, blockwise எழுந்து நிற்குமாறு அழைப்பேன். அவ்வாறு எழுந்து நிற்பவர்களின் பெயர்கள், முதன்மைச் செயலாளர் அவர்களால் ஒவ்வொரு பெயராகப் படிக்கப்பெற்ற பின்னர், பெயர் படிக்கப்பெற்ற அந்தக் குறிப்பிட்ட மாண்புமிகு உறுப்பினர் தனது இருக்கையிலே அமர்ந்துகொள்ளலாம்.

பேரவைமுன் உள்ள கேள்வி

"மாண்புமிகு திரு. மு. அப்பாவு அவர்களைப் பேரவைத் தலைவர் பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்று இப்பேரவை தீர்மானிக்கிறது"

பகுதி–1

தீர்மானத்தை ஆதரிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

–எவருமில்லை–

தீர்மானத்தை எதிர்ப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

1. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்
2. மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்
3. மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்
4. மாண்புமிகு திரு. ஆர்.எஸ். ராஜகண்ணப்பன்
5. மாண்புமிகு திரு. இரா. இராஜேந்திரன்
6. மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன்
7. மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ்
8. மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்
9. மாண்புமிகு திரு. வி.ஜி. இராஜேந்திரன்

[பேரவைத் துணைத் தலைவர்] [2025 மார்ச் 17

10. மாண்புமிகு டாக்டர் இரா. இலட்சுமணன்
11. மாண்புமிகு திரு. ரா. இளங்கோ
12. மாண்புமிகு முனைவர் த. இனிகோ இருதயராஜ்
13. மாண்புமிகு திரு. ப. கார்த்திகேயன்
14. மாண்புமிகு திரு. மு.பெ. கிரி
15. மாண்புமிகு திரு. ஆ. கிருஷ்ணசாமி
16. மாண்புமிகு திரு. எஸ். தங்கப்பாண்டியன்
17. மாண்புமிகு திரு. கோ. தளபதி
18. மாண்புமிகு திரு. ந. தியாகராஜன்
19. மாண்புமிகு திரு. ஆ. மகாராஜன்
20. மாண்புமிகு திரு. A.J. மணிக்கண்ணன்
21. மாண்புமிகு திரு. தே. மதியழகன்
22. மாண்புமிகு திரு. இரா. மாணிக்கம்
23. மாண்புமிகு திரு. பெ. ராமலிங்கம்
24. மாண்புமிகு திரு. ஈ. ராஜா
25. மாண்புமிகு திரு. வி.சி. சந்திரகுமார்
26. மாண்புமிகு திரு. அ.செ. வில்வநாதன்

தீர்மானத்திற்கு நடுநிலை வகிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

–எவருமில்லை–

பகுதி-2

தீர்மானத்தை ஆதரிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

–எவருமில்லை–

தீர்மானத்தை எதிர்ப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

27. மாண்புமிகு திரு. துரைமுருகன்
28. மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்

2025 மார்ச் 17] [பேரவைத் துணைத் தலைவர்]

29. மாண்புமிகு திரு. கே.என். நேரு
30. மாண்புமிகு திரு. இ. பெரியசாமி
31. மாண்புமிகு முனைவர் க. பொன்முடி
32. மாண்புமிகு திரு. எ.வ. வேலு
33. மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி
34. மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி
35. மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்
36. மாண்புமிகு திரு. பி. மூர்த்தி
37. மாண்புமிகு திரு. S.S. சிவசங்கர்
38. மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு
39. மாண்புமிகு திரு. N. அசோக்குமார்
40. மாண்புமிகு திரு. கா. அண்ணாதுரை
41. மாண்புமிகு திரு. மு. அப்துல் வஹாப்
42. மாண்புமிகு திருமதி V. அமலு
43. மாண்புமிகு திருமதி க. சிவகாமசுந்தரி
44. மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி
45. மாண்புமிகு திருமதி ம. வரலட்சுமி
46. மாண்புமிகு திரு. J.L. ஈஸ்வரப்பன்
47. மாண்புமிகு திரு. தா. உதயசூரியன்
48. மாண்புமிகு திரு. ஜே.ஜே. எபினேசர் என்கிற ஜே. ஜான் எபினேசர்
49. மாண்புமிகு திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்
50. மாண்புமிகு டாக்டர் நா. எழிலன்
51. மாண்புமிகு திரு. ஐட்ரீம் இரா. மூர்த்தி
52. மாண்புமிகு திரு. கோ. ஐயப்பன்
53. மாண்புமிகு திரு. டி.ஜெ. கோவிந்தராஜன்
54. மாண்புமிகு திரு. கே.பி. சங்கர்
55. மாண்புமிகு திரு. எம்.சி. சண்முகையா
56. மாண்புமிகு திரு. துரை. சந்திரசேகரன்
57. மாண்புமிகு திரு. S. சந்திரன்

[பேரவைத் துணைத் தலைவர்] [2025 மார்ச் 17

58. மாண்புமிகு திரு. கே.எஸ். சரவணகுமார்
59. மாண்புமிகு திரு. பெ.சு.தி. சரவணன்
60. மாண்புமிகு திரு. கே. தேவராஜி
61. மாண்புமிகு திரு. A.P. நந்தகுமார்
62. மாண்புமிகு திரு. A. நல்லதம்பி
63. மாண்புமிகு திரு. நிவேதா எம். முருகன்
64. மாண்புமிகு திரு. இ. பரந்தாமன்
65. மாண்புமிகு திரு. மொ. பழனியாண்டி
66. மாண்புமிகு திரு. டி.கே.ஜி. நீலமேகம்

தீர்மானத்திற்கு நடுநிலை வகிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

–எவருமில்லை–

பகுதி-3

தீர்மானத்தை ஆதரிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

–எவருமில்லை–

தீர்மானத்தை எதிர்ப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

67. மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்
68. மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்
69. மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு
70. மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி
71. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி
72. மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன்
73. மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்
74. மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்
75. மாண்புமிகு முனைவர் கோவி. செழியன்
76. மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்
77. மாண்புமிகு திரு. சா.மு. நாசர்

2025 மார்ச் 17] [பேரவைத் துணைத் தலைவர்]

78. மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி
79. மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன்
80. மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்
81. மாண்புமிகு முனைவர் டி.ஆர்.பி. ராஜா
82. மாண்புமிகு திரு. S. அம்பேத்குமார்
83. மாண்புமிகு திரு. ச. அரவிந்த் ரமேஷ்
84. மாண்புமிகு திரு. க. அன்பழகன்
85. மாண்புமிகு திரு. சபா. இராசேந்திரன்
86. மாண்புமிகு திரு. நா. இராமகிருஷ்ணன்
87. மாண்புமிகு திரு. S.R. இராஜா
88. மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான்
89. மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ்
90. மாண்புமிகு திரு. க.சொ.க. கண்ணன்
91. மாண்புமிகு திரு. க. கணபதி
92. மாண்புமிகு திரு. சீ. கதிரவன்
93. மாண்புமிகு திரு. இ. கருணாநிதி
94. மாண்புமிகு திரு. ஜெ. கருணாநிதி
95. மாண்புமிகு திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம்
96. மாண்புமிகு திரு. எஸ். காந்திராஜன்
97. மாண்புமிகு திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி
98. மாண்புமிகு திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன்
99. மாண்புமிகு திரு. எஸ். சுதர்சனம்
100. மாண்புமிகு திரு. க. சுந்தர்
101. மாண்புமிகு திரு. ஐ.பி. செந்தில்குமார்
102. மாண்புமிகு திரு. க. செல்வராஜ்
103. மாண்புமிகு திரு. R.D. சேகர்
104. மாண்புமிகு திரு. மு. பன்னீர்செல்வம்
105. மாண்புமிகு திரு. ஓய். பிரகாஷ்
106. மாண்புமிகு திரு. எ.எம்.வி. பிரபாகரராஜா
107. மாண்புமிகு திரு. ம. பிரபாகரன்

[பேரவைத் துணைத் தலைவர்] [2025 மார்ச் 17

108. மாண்புமிகு திரு. அ. அன்னியூர் சிவா (எ) சிவசண்முகம்
109. மாண்புமிகு திரு. பூண்டி கே. கலைவாணன்
110. மாண்புமிகு திரு. கே. பொன்னுசாமி
111. மாண்புமிகு திரு. G.V. மார்க்கண்டேயன்
112. மாண்புமிகு டாக்டர் வை. முத்துராஜா
113. மாண்புமிகு திரு. செ. முருகேசன்
114. மாண்புமிகு திரு. M.K. மோகன்
115. மாண்புமிகு திரு. A.G. வெங்கடாசலம்
116. மாண்புமிகு திரு. ஆ. வெங்கடேசன்
117. மாண்புமிகு திரு. அ. வெற்றிஅழகன்
118. மாண்புமிகு திரு. த. வேலு

தீர்மானத்திற்கு நடுநிலை வகிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

—எவருமில்லை—

பகுதி-4

தீர்மானத்தை ஆதரிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

1. மாண்புமிகு திரு. சேவூர் S. இராமச்சந்திரன்
2. மாண்புமிகு திரு. பி. தங்கமணி
3. மாண்புமிகு திரு. T.M. தமிழ்செல்வம்
4. மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்
5. மாண்புமிகு திரு. செ. தாமோதரன்
6. மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்
7. மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்
8. மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்
9. மாண்புமிகு திரு. வி.வி. ராஜன் செல்லப்பா
10. மாண்புமிகு திரு. M. ராஜமுத்து
11. மாண்புமிகு திரு. செல்லூர் கே. ராஜூ
12. மாண்புமிகு திரு. K.N. விஜயகுமார்

2025 மார்ச் 17] [பேரவைத் துணைத் தலைவர்]

13. மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்
14. மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்
15. மாண்புமிகு திரு. மு. ஜெகன்மூர்த்தி

தீர்மானத்தை எதிர்ப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

119. மாண்புமிகு திரு. வி.பி. நாகைமாலி
120. மாண்புமிகு திரு. ட்டி. இராமச்சந்திரன்
121. மாண்புமிகு டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்
122. மாண்புமிகு முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா
123. மாண்புமிகு திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்
124. மாண்புமிகு திரு. தி. வேல்முருகன்
125. மாண்புமிகு திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்
126. மாண்புமிகு திரு. மா. சின்னதுரை
127. மாண்புமிகு திரு. K. மாரிமுத்து
128. மாண்புமிகு திரு. கு. சின்னப்பா
129. மாண்புமிகு திரு. ப. அப்துல் சமது
130. மாண்புமிகு திரு. ஜோசப் சாமுவேல்
131. மாண்புமிகு திரு. S.S. பாலாஜி
132. மாண்புமிகு திரு. மு. பூமிநாதன்
133. மாண்புமிகு டாக்டர் A.R.R. ரகுராமன்
134. மாண்புமிகு திரு. செ. ஸ்டாலின் குமார்
135. மாண்புமிகு திரு. ஒ. ஜோதி
136. மாண்புமிகு திரு. தி. ராமச்சந்திரன்
137. மாண்புமிகு திரு. S. ராஜகுமார்
138. மாண்புமிகு திரு. ரூபி ஆர். மனோகரன்
139. மாண்புமிகு திரு. மு. பாபு

தீர்மானத்திற்கு நடுநிலை வகிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

–எவருமில்லை–

[பேரவைத் துணைத் தலைவர்] [2025 மார்ச் 17

பகுதி–5

தீர்மானத்தை ஆதரிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

16. மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி
17. மாண்புமிகு திரு. சு. ரவி
18. மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்
19. மாண்புமிகு திரு. பொ. அர்ஜுனன்
20. மாண்புமிகு திரு. P.R.G. அருண்குமார்
21. மாண்புமிகு திரு. K.C. கருப்பணன்
22. மாண்புமிகு திரு. இரா. காமராஜ்
23. மாண்புமிகு திரு. செ. கிருஷ்ணமுரளி
24. மாண்புமிகு திரு. ஆ. கோவிந்தசாமி
25. மாண்புமிகு திரு. வே. சம்பத்குமார்
26. மாண்புமிகு திரு. செ. சுந்தரராஜன்
27. மாண்புமிகு திரு. கோ. செந்தில் குமார்
28. மாண்புமிகு திரு. மா. செந்தில்குமார்
29. மாண்புமிகு திரு. பெரி. செந்தில்நாதன்
30. மாண்புமிகு திரு. A.K. செல்வராஜ்
31. மாண்புமிகு திரு. S. சேகர்
32. மாண்புமிகு முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்
33. மாண்புமிகு திரு. சி. மகேந்திரன்
34. மாண்புமிகு திரு. ரா. மணி
35. மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்
36. மாண்புமிகு திரு. இ.மா. மான்ராஜ்
37. மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி

தீர்மானத்தை எதிர்ப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

140. மாண்புமிகு திரு. செ. ராஜேஷ் குமார்
141. மாண்புமிகு திரு. கு. செல்வபெருந்தகை

2025 மார்ச் 17] [பேரவைத் துணைத் தலைவர்]

142. மாண்புமிகு திரு. ம. சிந்தனை செல்வன்

143. மாண்புமிகு திரு. ஆ.மு. முனிரத்தினம்

144. மாண்புமிகு திரு. JMH. அசன் மௌலானா

145. மாண்புமிகு திரு. இராம. கருமாணிக்கம்

146. மாண்புமிகு திரு. R. ராதாகிருஷ்ணன்

147. மாண்புமிகு முனைவர் தாரகை கத்பட்

148. மாண்புமிகு திரு. G. அசோகன்

149. மாண்புமிகு திரு. செ. ஊர்வசி அமிர்தராஜ்

150. மாண்புமிகு திரு. ஆர். கணேஷ்

151. மாண்புமிகு திரு. துரை. சந்திரசேகர்

152. மாண்புமிகு திரு. S. பழனி நாடார்

153. மாண்புமிகு திரு. ஜே.ஜி. பிரின்ஸ்

154. மாண்புமிகு திரு. சா. மாங்குடி

தீர்மானத்திற்கு நடுநிலை வகிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

–எவருமில்லை–

பகுதி–6

தீர்மானத்தை ஆதரிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

38. மாண்புமிகு திரு. எடப்பாடி K. பழனிசாமி

39. மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்

40. மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்

41. மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்

42. மாண்புமிகு திரு. கடம்பூர் ராஜூ

43. மாண்புமிகு திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி

44. மாண்புமிகு திரு. கி. அசோக்குமார்

45. மாண்புமிகு திரு. அம்மன் K. அர்ச்சுணன்

46. மாண்புமிகு திரு. பி. அய்யப்பன்

47. மாண்புமிகு முனைவர் பால் மனோஜ் பாண்டியன்

48. மாண்புமிகு திரு. ஆ. அருண்மொழிதேவன்
49. மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்
50. மாண்புமிகு திரு. V.P. கந்தசாமி
51. மாண்புமிகு திரு. மு. சக்ரபாணி
52. மாண்புமிகு திருமதி கு. சித்ரா
53. மாண்புமிகு திருமதி எஸ். தேன்மொழி
54. மாண்புமிகு திருமதி கு. மரகதம் குமரவேல்
55. மாண்புமிகு திரு. அ. நல்லதம்பி
56. மாண்புமிகு திரு. அ. பண்ணாரி
57. மாண்புமிகு திரு. K.A. பாண்டியன்
58. மாண்புமிகு திரு. ஈ. பாலசுப்ரமணியன்
59. மாண்புமிகு திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்
60. மாண்புமிகு திரு. S. ஜெயக்குமார்
61. மாண்புமிகு திரு. A.P. ஜெயசங்கரன்
62. மாண்புமிகு திரு. பொன். ஜெயசீலன்
63. மாண்புமிகு திரு. கே.ஆர். ஜெயராம்

தீர்மானத்தை எதிர்ப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

–எவருமில்லை–

தீர்மானத்திற்கு நடுநிலை வகிப்போர் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

–எவருமில்லை–

"மாண்புமிகு திரு. மு. அப்பாவு அவர்களைப் பேரவைத் தலைவர் பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்று இப்பேரவை தீர்மானிக்கிறது" என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, வாக்குகள் பின்வருமாறு எண்ணிக் கணிக்கப்பட்டன:

2025 மார்ச் 17] [பேரவைத் துணைத் தலைவர்]

தீர்மானத்தை ஆதரித்தோர்	–	63
தீர்மானத்தை எதிர்த்தோர்	–	154 (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)
நடுநிலை வகித்தோர்	–	எவருமில்லை

தீர்மானத்தை எதிர்த்தோர் அதிகமாக இருப்பதால், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்களால் முன்மொழியப்பட்ட தீர்மானம் தோல்வியுற்றது என அறிவிக்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் என்ற முறையில், ஒரு கருத்தை மட்டும் நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். இந்தத் தீர்மானத்தின் மீதான விவாதத்தின்போது நான் பேச இயலாது. பேரவைத் தலைவர் அவர்களோடு இணைந்து பணியாற்றியவன் என்ற முறையில் உங்களோடு நெருக்கமாக இருந்து அவரது பணியைக் கூர்ந்து கவனித்தவன். சொல்வது யாவர்க்கும் எளிது. ஆனால், உண்மையிலேயே பேரவை உறுப்பினர்கள் அனைவரும் திருப்தியுறும் வகையில் நடத்துவது என்பது Himalayan task என்று சொல்வார்களே, அதுபெரும் கடினம். 1989 ஆம் ஆண்டு முதல் நான் இந்தப் பேரவையில் பணியாற்றி வருகிறேன். பல பேரவைத் தலைவர்களின் பணிகளை நான் நேரிலே ஆளுங்கட்சியிலேயும், எதிர்க்கட்சியிலேயும் கண்ணுற்றுள்ளேன். அதுவும் பேரவை தொடங்கும் நேரத்திலிருந்து முடியும் நேரம்வரை நான் இருக்கையிலேயே இருப்பேன். தற்போதுள்ள எதிர்பார்ப்புகள், மாறிவரும் சூழ்நிலைகள், மாண்புமிகு உறுப்பினர்களின் மனோபாவங்கள் அனைத்துக்கும் ஈடு கொடுத்து, அனைத்து உறுப்பினர்களையும் திருப்திபடுத்துகிற பேரவைத் தலைவராக நம்முடைய பேரவைத் தலைவர்தான் திகழ்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு, பேரவைத் தலைவரை பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானம் கொடுத்திருந்தாலும், காலையிலே பார்த்தால் இங்கே இருக்கின்ற எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அத்தனைபேரும் பேரவைத் தலைவர் அவர்களின் அறையிலேதான் இருப்பார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மனதார அவரை எப்போதும் அவர்கள்

[பேரவைத் துணைத் தலைவர்] [*2025 மார்ச் 17*

நேசிக்கக்கூடியவர்களாகத்தான் இருக்கிறார்கள் என்பதற்கு அதுவே ஓர் எடுத்துக்காட்டு என்பதைத் தெரிவித்து, அதனையும் இந்தப் பேரவை ஏற்றுக்கொண்டுள்ளது. அவருடைய பணி தொடரட்டும்; அவருடைய பணி சிறக்கட்டும் என்று வாழ்த்தி, நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

(மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

பிற்பகல் 12–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் பேரவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதைவிட, இன்று நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் என்மீது வைத்திருக்கின்ற நம்பிக்கை; (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சட்டமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர், தோழமைக் கட்சி நண்பர்கள் உட்பட அனைவரும் பேசிய வார்த்தைகளையும் நான் கேட்டுக்கொண்டுதான் இருந்தேன்; எனக்கு இன்னும் பெருமையாக இருக்கின்றது.

ஒரு சில தவறுகள் நடந்திருந்தாலும்கூட, என்னை நானே திருத்தியிருப்பேன் அல்லது நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பார்த்து பலமுறை நான் திருத்தப்பட்டிருக்கிறேன். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல வேண்டுமென்றால், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், 'பேச அனுமதிக்கவில்லை; எங்களுக்கு நேரம் ஒதுக்குவதில்லை' என்று சொன்னார்கள். அதற்குத்தான், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், '*2* மணி *52* நிமிடங்கள் பேசுகின்ற வாய்ப்பை கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் கொடுத்தோம்' என்று கூறினார்கள். நான் மாண்புமிகு முதல்வர் அவர்களை, அந்த *2* மணி *52* நிமிடங்களும் உன்னிப்பாகக் கவனித்ததில் நான் ஒன்றை அறிந்துகொண்டேன். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வைத்த விமர்சனங்கள், குற்றச்சாட்டுகள் என எதைச் சொன்னாலும், அதனை அவர் அவசரப்பட்டோ அல்லது ஆத்திரத்துடனோ அல்லது கோபத்துடனோ அல்லது எரிச்சலுடனோ ஒருமுறைகூட அணுகாமல், அமைதியாக அமர்ந்துகொண்டு, அதை உள்வாங்கி, பதில் இருந்தால் உடனடியாகப் பதிலையோ, (மேசையைத் தட்டும் ஒலி) இல்லையென்றால், நாளை பதில்

2025 மார்ச் 17] [பேரவைத் தலைவர்]

தருகிறேன் என்றோ சொல்கின்ற அந்தப் பண்புதான் இந்தச் சட்டமன்றத்தை, ஜனநாயகத்தை தலைநிமிரச் செய்திருக்கிறது என்பதை நான் உறுதியாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்; அது உங்களுக்கும் நன்றாகத் தெரியும்.

என்னை சட்டமன்றப் பேரவைத் தலைவராக்கிய பிறகு, இதுவரை ஒருநாள்கூட நீங்கள் ஏன் இவ்வாறு நடந்து கொண்டீர்கள்? இவ்வாறு ஏன் நடக்கவில்லை? எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு ஏன் இவ்வளவு நேரம் பேச வாய்ப்புக் கொடுத்தீர்கள்? 2 மணி 52 நிமிடங்கள் பேசுவதற்கு எப்படி வாய்ப்பு அளிக்கலாம் என்று தானோ, தன் சார்பாகவோ இதுவரை என்னுடைய கவனத்திற்குச் சொல்லவில்லை; இது எவ்வளவு பெரிய ஜனநாயகம் என்பதை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களிடமிருந்து நாம் தெரிந்துகொள்ள வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், 'பேசுவதற்கு வாய்ப்புத் தரவில்லை' என்று சொன்னார்கள். அவர்களுக்கு நான் ஒரேயொரு உதாரணத்தை மட்டும் சொல்கிறேன். கடந்த ஆளுநர் உரை மீதான விவாதத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் 6 மணி 33 நிமிடங்களும், பிரதான எதிர்க்கட்சியான அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் 12 மணி 26 நிமிடங்களும் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஆளுங்கட்சியினருக்கு 25 சதவிகிதமும், பிரதான எதிர்க்கட்சிக்கு மட்டும் 49 சதவிகிதமும் பேசுவதற்கு வாய்ப்பளிக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த அவையினுடைய மேலான கவனத்திற்கு நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, மற்றொரு குற்றச்சாட்டு வைக்கப்பட்டது; இந்த அரசு ஒரே நாளில் 2, 3 மானியக் கோரிக்கைகளை எடுத்து நடத்துவதாகச் சொன்னார்கள். உங்களுக்கு நன்றாக நினைவிருக்கும்; 31-7-2004 அன்று ஒரே நாளில் இதே சட்டமன்றத்தில்தான் 24 மானியக் கோரிக்கைகளும் நிறைவேற்றப்பட்டன. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபோதுதான் அவ்வாறு நடைபெற்றது என்பதையும் உங்களுடைய கவனத்திற்கு நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[பேரவைத் தலைவர்] [2025 மார்ச் 17

பிற்பகல் 12–25

அதோடு மட்டுமல்ல, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜன் செல்லப்பா அவர்கள் பேசுகின்ற நேரத்தில் நான் அவர்களை, 'போராட்டத்தைத் தூண்டிவிட்டது நீங்கள்தான்' என்று சொன்னதாகச் சொன்னார்கள். எதற்காக, என்ன நடந்தது என்பதை நீங்கள் முழுமையாகப் படித்திருப்பீர்கள்; படித்திருக்க வேண்டுமென்று சொல்கின்றேன். அந்த டங்ஸ்டன் விவகாரத்திற்கு அன்றைய கவன ஈர்ப்புத் தீர்மானம் நீங்கள் எழுதித் தரவில்லை. பிரதான எதிர்க்கட்சியில், டங்ஸ்டன் தீர்மானத்தின்மீதோ, அதிலுள்ள அக்கறை இருந்தால், 66 சட்டமன்ற உறுப்பினர்களில் ஒருவர்கூட எழுதித் தரவில்லை. என்னுடைய கவனத்திற்கு நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள், 'பேச அனுமதியுங்கள்' என்று சொன்ன காரணத்தினால், அந்த subject மட்டும் பேச வேண்டும்; வேறு எதையும் பேசக் கூடாது என்ற அடிப்படையில் அவர்களுக்குப் பேச வாய்ப்பளித்தபோது, பல குற்றச்சாட்டுகளை அவர் பதிவு செய்தார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உறுதி கொடுத்திருக்கின்றார்; மாண்புமிகு அமைச்சர்கள் நேரில் வந்தார்கள்; அதற்குப் பிறகும் பல சம்பவங்களை அவர் சொன்ன காரணத்தினால்தான், அவர் பேசியதைக் குறிப்பாக உணர்ந்து வருகிறபோது, நீங்கள் பேசுவதைப் பார்க்கும்போது, நீங்களே இந்தப் போராட்டத்தைத் தூண்டியதுபோல் தெரிகிறது; எனக்கு அது தெரியவில்லை. அப்படி தெரிகிறது என்றுதான் சொன்னேனே தவிர, நீங்கள்தான் தூண்டினீர்கள் என்று சொல்லவில்லை என்பதையும் இந்த அவையினுடைய கவனத்திற்கு நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

என்னை, பேரவைத் தலைவர் பதவியிலிருந்து நீக்கக் கோரும் இத்தீர்மானம் சம்பந்தப்பட்ட அறிவிப்பு சில அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களால் அளிக்கப்பட்டு, அனைவராலும் அல்ல, ஒரு சிலரால் மட்டும் அளிக்கப்பட்டு, அதுவும் தற்போது எடுத்துக்கொள்ளப்பட்டு, விவாதிக்கப்பட்டது. அது தோற்கடிக்கப்பட்டது என்று சொல்ல மாட்டேன்; ஜனநாயக அமைப்பிலே, பேரவையிலே அது நிராகரிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், என் பணித் திறத்தை மெச்சி பேசிய மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவை

பெருமக்கள், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர்கள், தோழமைக் கட்சி நண்பர்கள் உட்பட அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே பழித்தும் பாசத்தோடும் பேசிய பேரவை உறுப்பினர்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்பேரவையில் நான் ஓர் உறுப்பினராக 2006 ஆம் ஆண்டு முதல் பணியாற்றியபோது, கலைஞர் அவர்கள் எனக்குக் கற்றுத் தந்தது; அன்றைக்கு 2006 ஆம் ஆண்டு என்று நினைக்கின்றேன். இதுபோன்று அப்போதைய பேரவைத் தலைவர் அவர்கள்மீது தீர்மானம் கொண்டுவரப்பட்டபோது, கலைஞர் சொன்ன வரிகளைத்தான் நான் நினைவுகூருகிறேன். 'தங்களைத் தாங்களே நம்பாமல் கொண்டு வந்த தீர்மானம்' என்றார் மறைந்த தலைவர் கலைஞர். இந்த வரிகள்தான் எனக்கு இப்போதும் நினைவுக்கு வருகின்றது. நான் நினைத்துப் பார்க்கின்றேன். இங்கே அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் குறிப்பிட்ட சில கருத்துகள் அடிப்படையில் நான் செயல்பட்டிருப்பேனானால், மாண்புமிகு முதல்வர் அவர்கள் வாளாயிருக்க மாட்டார்; உண்மையிலேயே பேரவையிலேயே எழுந்து, கருத்தைத் தெரிவித்திருப்பார். ஏனென்றால், மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேரவைத் தலைவர் பதவிக்கு எந்தளவிற்கு மரியாதை அளிக்கின்றார் என்பதற்கு ஓர் உதாரணம், இதுவரையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள்தான், பேரவைத் தலைவர் அவர்களுடைய அறைக்கு வந்து சந்தித்திருக்கின்றார்கள். இவ்வளவு பெரும் மதிப்பு வைத்திருக்கின்ற பேரவைத் தலைவர் பதவியில் உள்ளவர், அந்தப் பதவிக்கு களங்கம் வருகின்ற வகையில் நடந்து கொண்டால், அடுத்த நிமிடமே பேரவையிலேயே பதிவு செய்திருப்பார். நம்முடைய கலைஞர், பேரவைக்கும், பேரவைத் தலைவருக்கும், பேரவை உறுப்பினர்களுக்கும் எந்தளவு மரியாதை, மதிப்பு தருவாரோ, அதைவிட கடுகளவும் குறையாமல் காப்பாற்றுகின்றவர்; அவர் வழியில் நடக்கின்றவர் நம்முடைய முதல்வர், மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பேரவையே சில காலம் ஜனநாயகம் வீழ்ந்து, இங்கே சட்டமன்ற நடவடிக்கைகள் பாழ்பட்டிருந்த காலத்தில், அனுபவித்த கொடுமைகள், பெற்ற அனுபவங்கள், அதனடிப்படையில் இயற்கையிலேயே ஜனநாயக அமைப்பின்பால் தான்கொண்ட பற்று, பேரவைக்கு உள்ள மாண்பினை முழுவதும் உணர்ந்த

[பேரவைத் தலைவர்] [2025 மார்ச் 17

பண்பு, பேரவைத் தலைவர்மீது கொண்ட மரியாதை ஆகியவற்றினால், இந்தப் பேரவை எடுத்துக்காட்டாய் அமைய மீண்டும் விதை விதைத்தவர் நம்முடைய இன்றைய முதல்வர் மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள். ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கு அதிக வாய்ப்புகள் அளிக்காமல், ஜனநாயக முறைப்படி எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு அதிக வாய்ப்புகள் அளித்துள்ளதாக, ஏன் இங்கே நம்முடைய மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் உள்ளிட்ட சில மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்கூட இந்தப் பேரவையிலேயே அதனைப் பதிவு செய்துள்ளார்கள். என்னுடைய இந்தக் குணத்திற்குக் காரணம் நான் ஆசானாக ஏற்றுக்கொண்ட கலைஞர் அவர்களிடம் கற்ற பாடம்; மாண்புமிகு முதல்வர் அவர்கள் எனக்கு இட்ட கட்டளை.

ஒன்றை நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய தனித்த குணம் மட்டுமல்ல; சாமானிய ஏழையெளிய மக்கள்மீது இருக்கின்ற பாசம்; அவர்களுடைய கொள்கையில் உறுதி இவற்றையெல்லாம் கருத்தில்கொண்டு தற்போது Artificial Intelligence என்று சொல்கின்ற Meta Artificial Intelligence; அதுபோன்று CHATGPT போன்ற பல நிறுவனங்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய பணிகளை ஆய்வு செய்து, அறிக்கையாக அல்ல, மும்பையில் இந்தியன் எக்ஸ்பிரஸில் 32 ஆண்டுகள் பணியாற்றிய ஒரு பத்திரிகையாளர் கேட்ட கேள்விக்கு, அதனுடைய பதிலாக, Artificial Intelligence; Meta Data என்பார்களே, அதிலுள்ள தகவல், பல்வேறு ஆய்வுகள் மற்றும் தரவரிசைகளின் அடிப்படையில், இந்தியாவிலுள்ள முதல்வர்கள் பட்டியலில் 67 சதவிகிதம் ஒப்புதல் மதிப்பீட்டுடன் இந்தியாவின் சிறந்த முதலமைச்சராக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முதலிடத்தில் தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–30

அதேபோன்று, சட்டசபையில் அவர்களுடைய வழிகாட்டுதலோடு நடைபெறுகின்ற இந்தச் சட்டமன்றத்திற்கும் எவ்வளவு பெரிய மாண்பு இருக்கிறது என்பதை நீங்கள் அதே Meta DATA போன்ற Artificial Intelligence தரவுகளிலிருந்து

2025 மார்ச் 17] [பேரவைத் தலைவர்]

Indian Express-னுடைய மூத்தப் பத்திரிகையாளர்கள் எடுத்த தரவுகளின் அடிப்படையில் சொல்கிறேன். சட்டசபையில் பாராளுமன்ற நாகரிகத்தை நிலைநாட்டிய சபாநாயகர்கள் பட்டியல் உள்ளது. முதலாவதாக Thiru. G.V. Mavalankar அவர்கள், *1952–1956* ஆம் ஆண்டுகளில் மக்களவையின் சபாநாயகராக இருந்தவர். இரண்டாவதாக, Thiru. Somnath Chatterjee அவர்கள், *2004–2009* ஆம் ஆண்டுகளில் மக்களவை சபாநாயகராக இருந்தவர். மூன்றாவதாக, தற்போது தமிழக சட்டப் பேரவைத் தலைவராக இருக்கின்ற இந்த அப்பாவு, இந்தத் தொண்டனை குறிப்பிட்டுள்ளார் என்பதை இந்தப் பேரவைக்கு நான் பதிவு செய்துகொள்ள விரும்புகிறேன்.

பேரவை விதிகள், மரபுகள் குறிப்பாக, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எவர் மனமும் நோகக் கூடாது. இதுதான் எனக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் இட்ட கட்டளை. அதன்படிதான் நான் நடந்துள்ளேன். இந்தத் தீர்மானம் இங்கே விவாதிக்கப்பட்டதில் எனக்கு எள்முனையளவும் வருத்தம் இல்லை. ஆனாலும்கூட, இந்தத் தீர்மானம் விவாதிக்கப்பட்டு, நிராகரிக்கப்பட்ட நிலையில், நான் கடந்து வந்த இந்த நான்கு ஆண்டு கால பணியில் இங்கே நம்முடைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வைத்த கருத்துகளிலிருந்து, வாதங்களிலிருந்து நான் தெளிவாகப் புரிந்துகொண்டது; அவர்களும் என்னுடைய பணியைப் பாராட்டியுள்ளதாகவே நான் எண்ணி மகிழ்ச்சியடைகிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்க, நேரடி ஒளிபரப்பு என்பது படிப்படியாக நடந்து கொண்டிருக்கிறது. கலைஞர் அவர்கள் சொல்வார்கள்,

> 'இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
> கெடுப்பா ரிலானுங் கெடும்.'

குறையைச் சொல்வோர் வேண்டும். இங்கே குறை சொல்வதாகக் கருதி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை சார்ந்தவர்கள் அறியாமல் கடந்த காலத்தோடு ஒப்பிட்டுப் பேசியுள்ளார்கள், எதிர்கால சமுதாயப் பணியினைப் பார்க்கும்போது, நிச்சயமாக என்னுடைய பணி பாராட்டப்பட்டதோடு மட்டுமல்ல——என்மீது அன்பு, பாசம் வைத்திருக்கின்ற எல்லோரும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் உட்பட அனைவருக்கும் நான் மீண்டும் ஒரு முறை நெஞ்சார,

[பேரவைத் தலைவர்] [2025 மார்ச் 17

மனமார நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, இன்னும் நடுநிலையோடு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் நினைக்கின்ற அளவுக்கு, இந்தச் சட்டமன்றம் தொடர்ந்து நடைபெறும் என்பதையும் கூறிக்கொண்டு, அடுத்த அலுவலுக்குச் செல்ல நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

5. வரவு-செலவுத் திட்டம் மற்றும் வேளாண்மை நிதிநிலை அறிக்கை, 2025-2026, பொது விவாதம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2025–2026 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மற்றும் வேளாண்மை நிதிநிலை அறிக்கை ஆகியவற்றின்மீது பொது விவாதம். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி அவர்கள். இன்றைய விவாதத்தில் 6 சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டு உரையாற்ற இருக்கின்றீர்கள். சரியாக ஒவ்வொருவருக்கும் 10 நிமிடங்கள் ஒதுக்க வேண்டும். சரியாக 1–30 மணிக்குள் அனைவரும் முடித்துத் தர வேண்டும். முதலாவதாகப் பேச வருகின்ற மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி அவர்களுக்குக் கூடுதலாக 5 நிமிடங்கள் வழங்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி அவர்கள்.

***திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2025–2026 ஆம் ஆண்டினுடைய நிதிநிலை அறிக்கையின்மீது இந்த மாமன்றத்தில் என்னுடைய கருத்துகளைப் பதிவு செய்வதற்கு வாய்ப்பளித்த எங்களுடைய இயக்கத்தின் தலைவர்; போற்றுதலுக்குரிய எடப்பாடியார் அவர்களை (மேசையைத் தட்டும் ஒலி) வணங்கி, நன்றி கூறி, இந்த அவையில் கருத்துகளைக் கூறுவதற்குரிய அனுமதி வழங்கிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு என் அன்பினைத் தெரிவித்து என்னுடைய கருத்துகளைப் பதிவு செய்ய நான் இங்கே கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12–35

கடந்த 13–3–2025-ல் தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திட்டக் குழுவின் சார்பாக ஒரு பொருளாதார ஆய்வறிக்கையைச் சமர்ப்பித்தார்கள். அப்படி சமர்ப்பித்ததில் பிரதானமாக 2030-ல், தமிழகம்